# ஜீவனா சுவாச காற்று

காற்று-2 அக்டோபர் 2011 சுவாசம்-9
ஆண்டு சந்தா ₹200/- தனி இதழ் ₹20/-




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலர்ந்த எலும்புகளுக்கு உயிர் கொடுக்க தள்ளாடும் முழங்கால்களுக்கு பெலன் கொடுக்க பழையவைகளைக் களைந்து, புதியவைகளைப் புகுத்த ஜீவ சுவாசத்துடன் மாதந்தோறும் சுற்றி வரும் தென்றல்தான் இந்த... **ரூஹா சுவாச காற்று**

# இதயம் திறந்து உங்களுடன்...

இயேசு கிறிஸ்துவின் வல்லமையுள்ள இணையற்ற நாமத்தில் என் அன்பின் வாழ்த்துகள்.

அவருடைய பெரிதான கிருபையினால் கடந்த மாதம் இலங்கையில் **'FREEDOM'** நடத்தி தேசத்தின் எழுப்புதலுக்கு தடையாய் இருந்த எரிகோ கோட்டையை தேவன் தகர்த்தெறிந்தார். திகிலோடும் பயத்தோடும் ஆவிக்குரிய வனாந்தரத்தில் வறட்சியினால் வாடி, வதங்கிய தேவனுடைய ஜனங்களின் சிறையிருப்பை திருப்பி ஆனந்த தைலத்தினால் நிரப்பினார். அநேகர் ஆத்தும சிறைச்சாலை உடைக்கப்பட்டு, ஆவியானவரோடு உறவாடி, மகிமையான அபிஷேகத்தைப் பெற்று கர்த்தரை மகிமைப்படுத்தி



னார்கள். விலையேறப்பெற்ற ஆத்துமாக்களின் நுகத்தடியை முறித்து, அக்கிரமத்தின் கட்டுகளை அறுத்து விடுதலை செய்தார். கடைசி கால அறுவடையை எடுத்து தேவனின் ராஜ்ஜியத்திற்கு ஒப்படைத்தோம்.

பிரியமானவர்களே, கர்த்தருக்கு ஒருநாள் ஆயிரம் வருஷம் போலவும், ஆயிரம் வருஷம் ஒருநாள் போலவும் இருக்கிறது என்பதை நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். ஆகையால், காலம் மிகவும் சமீபமாயிற்று. கர்த்தர் தாமதிக்கிறார் என்று எண்ணுகிறபடியல்ல அவர் வாக்குப் பண்ணினதை ஒருபோதும் மாற்றுவதில்லை. மழை மேகங்களைப் பார்த்து வானத்தை அளந்து பார்க்கிற நாம் அவருடைய வருகை மிக சமீபமாயிற்று என்ற உணர்வில்லாமல் அநித்தியமான ஆதாயத்தை நோக்கி ஓடிக் கொண்டிருக்கிறோம் என்பது கசப்பான உண்மை. நாம் கிருபையின் வாசல் அடைபடுவதற்கு அருகில் நிற்கிறோம். ஆகையால், சுவிசேஷ வாசல் முடப்படுவதற்குள்ளாக நாம் சகல ஜனங்களுக்கும், அவருடைய மகத்துவத்தையும் மகிமையையும் விடுதலையையும் அதிவேகத்தில் சுமந்து செல்ல வேண்டியது மிகமிக முக்கியமாக உள்ளது. 2014-ல் இருந்து ஊழியத்தின் வாசல்கள் மிகவும் கடினமாக போகப்போகிறது என்று கர்த்தர் வெளிப்படுத்தி கொண்டிருக்கிறார். என் ஏக்கம், என் இதய துடிப்பெல்லாம் இந்த ப்ரீடம் என்கிற தரிசனம் இந்தியா முழுவதிலும் நடைபெற வேண்டும் என்பதுதான்.

அனுதினமும் இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் ஆலயத்தில் சேர்த்துக் கொண்டு வருகிறார். கடந்த மாதம் வாசித்திருப்பீர்கள், பல வகையான ஊழியங்களை பாரத்தோடு அழிந்து போகிற ஆத்துமாக்களுக்கு செய்யும்படி தீவிரமாய் இருக்கிறேன். அவ்வூழியங்களை செய்வதற்கு போதுமான இடம் இல்லாததால் மிகவும் கடினமாக உள்ளது. தயவாக எங்களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஸ்தாரமான இடம் கிடைக்க ஜெபிப்பீர்களா? அவருடைய அளவற்ற இரக்கத்தை வேண்டி அவருடைய சமூகத்தில் மன்றாட என்னோடும் இவ் வூழியங்களோடும் இணைவீர்களா?

மிகப்பெரிய காரிருள் பூமியையும் ஜனங்களையும் மூடப்போகிறது. நோவாவின் நாட்களில் நடந்ததுபோல இன்றைக்கும் நடந்து கொண்டிருக்கிறது. கிரகிக்க முடியாத நிகழ்வுகள் உலகமெங்கிலும் நடைப்பெற்றுக் கொண்டிருக்கிறதை காண்கிறோம். இப்பத்திரிக்கையை ஆசையோடு வாசிக்கிற தேவபிள்ளைகளே, தேவனின் முத்திரைகள் உடைக்கப்பட்டு கேட்டின் மகன் வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறான். நீங்கள் எங்களோடு இணைந்து தேவனின் இராஜ்ஜியம் ஸ்தாபிக்கப்பட நரகத்திற்கு நேராக வேகமாக செல்லுகிற ஆத்துமாக்களுக்காக திறப்பின் வாசலிலே நிற்க வருவீர்களா? நம்மை சுற்றிலும் நடைபெறுகிற சகல அருவருப்பான காரியங்களுக்காகவும், பெருமூச்சு விட்டு அழுகிற மனுஷர்களை தேவன் தேடிக்கொண்டிருக்கிறார். நீங்கள் அந்த நபராக மாறுவீர்களா?

உங்கள் ஜெப உதவி எனக்கு மிகவும் தேவைப்படுகிறது. சத்துருவானவன் ஆத்துமாக்களை வஞ்சிக்காதபடிக்கு திறப்பிலே நிற்கவும், இரவும் பகலும் ஜாமக்காரரின் சத்தம் கேட்கப்படவும், ஆத்துமாக்களுக்காய் உங்கள் இருதயங்களை கிழித்து ஜெபிக்க எங்களோடு இணைவீர்களா?

உங்களுடைய ஜெபக்குறிப்புகள் எதுவாயினும் தயங்காமல் நீங்கள் என்னிடம் தொலைபேசி அல்லது மின்னஞ்சல் மூலமாக தொடர்பு கொள்ளலாம். நான் உங்களுக்காக ஜெபிக்க எப்பொழுதும் ஆயத்தமாக இருக்கிறேன். இப்பத்திரிக்கை எல்லா ஜாதிகளுக்கும் தேசங்களுக்கும் கடந்து செல்ல ஊக்கமாய் ஜெபிக்கும்படி உங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்த மாதம் உங்களை சந்திக்கும்வரை கர்த்தருடைய கிருபை உங்களை பாதுகாத்து வழிநடத்துவதாக!

அன்புடனும், ஜெபத்துடனும்

கிறிஸ்துவின் பணியில்,

உங்கள் அன்பு சகோதரன்

**E. ஆல்வின் தாமஸ்**

alwinthomas@ruah.in
facebook.com/thomasealwin
twitter.com/alwinthomas
Ruah Ministries, # 155, Pepzen Court, Arcot Road,
Kodambakkam, Chennai - 24. Tamilnadu, South India.
044 - 2372 8822

mail your comments to :
magazine@ruah.in
for e-magazine info :
www.ruahministries.org/magazine
ஆண்டு சந்தா ரூ.200/-
தனி பிரதியின் விலை ரூ.20/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகோதரர்
ஆல்வின் தாமஸ்

கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன். (பிலிப்பியர் 3:14)

# ஓடு...




கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்ட என் அன்பு தேவ ஜனமே, இந்த அக்டோபர் மாதம் உங்களுக்கு விசேஷித்த மாதமாக அமையப்போகிறது. ஏன் தெரியுமா? தேவனாகிய கர்த்தர் உங்களுக்கென்று வைத்திருக்கும் மேன்மையான ஆசீர்வாதங்களை இந்த மாதத்தில் நீங்கள் சுதந்தரித்துக் கொள்ளப்போகின்றீர்கள். கர்த்தர் உங்களுக்காக யாவையும் செய்து முடிக்க போகிறார். கர்த்தருக்கென்று உண்மையும் உத்தமமுமாய் ஓடும்போது நிச்சயமாகவே அவருடைய உன்னத ஆசீர்வாதங்களை நீங்கள் இலகுவாய் பெற்றுக்கொள்ள முடியும்.

இப்போதும், கிறிஸ்துவானவர் நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் நாம் எவ்வாறு ஓடவேண்டும் என்பதைக் குறித்து இந்த மாதத்தில் நான் உங்களுக்கு எழுத விரும்புகிறேன். கர்த்தர் இச்செய்தியின் மூலம் உங்களோடு இடைபடுவார் என்று விசுவாசிக்கிறேன். வாசித்து நிறைவான ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள். பிரியமானவர்களே! வாழ்க்கையில் ஒவ்வொருவருக்கும் ஏதாவது ஒரு விதத்தில் சாதனை செய்ய ஆசை. சிலர் மிக வேகமாக ஓட்டப்பந்தயத்தில் ஓடி சாதனை செய்கிறார்கள். சிலர் அறிவாற்றலினால் புதிய கண்டுபிடிப்புகளைக் கண்டுபிடித்து சாதனை செய்கின்றனர். இன்னும் சிலர் உயிரை பணயம் வைத்து பல புதிய சாதனைகளை செய்கிறார்கள். ஆனால் நாமோ பரலோகத்தை சுதந்தரித்துக் கொள்ள அழைக்கப்பட்டிருக்கிறோம். அதற்காகவே ஓடிக் கொண்டிருக்கிறோம்.

***நல்ல போராட்டத்தைப் போராடினேன்; ஓட்டத்தை முடித்தேன் விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன் (2 தீமோ 4:7)***

என்று அப்போஸ்தலனாகிய பவுல் ஜெயகெம்பீரமாய் முழங்கினார். இன்றைக்கு பலர் தங்கள் ஓட்டத்தை வெற்றியாய் ஓடி முடிப்பதில்லை காரணம் இயல்பாகவே ஒரு மனுஷன் ஒரு காரியத்தின் துவக்கத்திற்கு கொடுக்கிற கௌரவத்தையும் முக்கியத்துவத்தையும் அக்காரியத்தின் முடிவிற்கு கொடுப்பதில்லை. நன்றாக ஓட்டத்தை துவக்குகிறார்கள் ஆனால் பாதியிலேயே நின்று விடுகிறார்கள். ஆவியிலே துவக்குகிறார்கள் மாம்சத் திலே முடித்துவிடுகிறார்கள். நாம் துவக்கத்தின் மேல் கண்களை வைப்பதை விட முடிவின் மேல் நோக்கமாய் இருப்பது நல்லது.

ஒரு ஓட்டப்பந்தயமானாலும் சரி கால் பந்தாட்டமானாலும் சரி அதின் முடிவே முக்கியமானது என்பதை நாம் அறிய வேண்டும். இயேசு கிறிஸ்துவின் தொடக்கத்தைப் பாருங்கள் அது அற்பமான ஆரம்பமாக இருந்தது. பெத்லகேம் சத்திரத்தில் இடம் இல்லாமல் முன்னணையில் படுத்துக் கிடந்தார். ஆனால் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றி தன் ஓட்டத்தை ஜெயமாய் முடித்தார். ஆம்! அவருடைய முடிவு எத்தனை மகிமையானது பார்த்தீர்களா! மரணத்தையும் பாதாளத்தையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெயித்து உயிர்த்தெழுந்தவராய் நமக்கும் ஜெயத்தை வாக்களித்து சென்றிருக்கிறார். அன்பு தேவப்பிள்ளைகளே! நம்மையும் கூட ஒரு நோக்கத்தோடு இந்த உலகத்தில் தேவன் வைத்திருக்கிறார். ஆகவேதான் அவருடைய சித்தத்தை நிறைவேற்ற நாம் ஓடிக்கொண்டிருக்கிறோம்.

அன்று தன் சகோதரர்களால் மீதியானியர்களிடத்தில் விற்கப்பட்ட யோசேப்பு அந்நிய தேசத்தில் வாழ்ந்த நாட்களில் பாவம் அவரை கரம் நீட்டி அழைத்தபோது அதற்கு விலகி ஓடினார். ஆகவே தான், பின் நாட்களில் சிங்காசனத்தில் அமரும் ராஜ அந்தஸ்தை பெற்றார். மலடி என்று சொல்லப்பட்ட அன்னாள் தேவாலயத்தை நோக்கி ஓடினாள் பொருத்தனையோடு ஜெபித்து தீர்க்கதரிசியாகிய சாமுவேலைப் பரிசாக பெற்றாள். மகதலேனா மரியாள் அதிகாலை இருட்டோடே இயேசு கிறிஸ்துவின் கல்லறைக்கு ஓடினாள் உயிர்த்தெழுந்த ஆண்டவரை முகமுகமாய் தரிசிக்கும் பாக்கியத்தைப் பெற்றாள். இன்று நீங்கள் எதைநோக்கி ஓடிக்கொண்டிருக்கிறீர்கள்? உலகத்தை நோக்கியா? அல்லது பரலோகத்தை நோக்கியா? என்பதை சற்று சிந்தித்துப் பாருங்கள். பரலோகம் நித்திய நித்தியமானது. பூலோகம் அநித்தியமானது.

நாம் ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு வினாடி நேரமும் நித்தியத்தை நோக்கி ஓடிக்கொண்டிருக்க வேண்டும். ஆம்! கர்த்தருடைய வருகையை நோக்கி ஓடிக்கொண்டிருக்கவேண்டும். அவர் ஆயிரம் பதினாயிரமான தேவதூதர்களுடனும் பரிசுத்தவான்களுடனும் மகிமையிலே வெளிப்படபோகிற நாளை நோக்கி காத்திருக்க வேண்டும். ஆகவே, பரலோகத்தைப் பெற்றுக் கொள்ளத்தக்கதாக ஓடுவோமா?

## 1 இரதத்தோடு ஓடு

*நீ காலாட்களோடே ஓடும்போதே உன்னை இளைக்கப்பண்ணினார்களானால், குதிரைகளோடே எப்படிச் சேர்ந்து ஓடுவாய்? சமாதானமுள்ள தேசத்திலேயே நீ அடைக்கலம் தேடினால், யோர்தான் பிரவாகித்து வரும்போது நீ என்ன செய்வாய்? (எரேமியா 12:5)*

அநேகர் தங்கள் ஓட்டத்தை பாதியிலேயே முடித்துவிடுகிறதற்குக் காரணம் சோர்வுதான். ஓட்டத்தை ஜெயமாய் ஓட முடியாதபடி பிரச்சனைகளையும் போராட்டங்களையும் கண்டு சோர்ந்து போய்விடுகின்றனர். இனி என்னால் ஒன்றுமே செய்ய முடியாது என்று சொல்லி பாதியிலேயே நின்று விடுகின்றனர். ஆகவே தான் வேதம் சொல்லுகிறது நீ காலாட்களோடே ஓடும்போதே சோர்ந்து போகிறாயே எப்படி இரதத்தோடு சேர்ந்து ஓடுவாய். அன்றைக்கு சோர்வுக்கு இடம் கொடுத்த எலியா தன் ஓட்டத்தை பாதியிலேயே நிறுத்தி விட எண்ணி போதும் கர்த்தாவே என் ஆத்துமாவை எடுத்துக் கொள்ளும் என்று புலம்பினார். *அவன் வனாந்திரத்தில் ஒருநாள் பிரயாணம்போய் ஒரு சூரைச்செடியின் கீழ் உட்கார்ந்து தான் சாகவேண்டுமென்றுகோரி போதும் கர்த்தாவே என் ஆத்துமாவை எடுத்துக் கொள்ளும் நான் என் பிதாக்களைப் பார்க்கிலும் நல்லவன் அல்ல என்று சொல்லி ஒரு சூரைச் செடியின் கீழ் படுத்துக்கொண்டு நித்திரை செய்தான். (1 இரா 19:4,5)* சோர்ந்து போயிருந்த எலியாவை தேவன் தமது தூதனை அனுப்பி பெலப்படுத்தினார். தேவனால் பெலப்படுத்தப்பட்ட எலியா அதன் பின்பு தன் ஓட்டத்தை ஜெயமாய் ஓடிமுடித்தார். நீங்களும் எலியாவைப் போல சிறுசிறு காரியங்களுக்கே சோர்ந்து போவீர்களானால் எப்படி பெரிய காரியங்களை தேவனுக்காய் சாதிப்பீர்கள்.

ஜான் வெஸ்லி என்னும் தேவ ஊழியர் தன் ஜீவிய காலமெல்லாம் கர்த்தருக்காகவே ஓடினார். அவரது ஆவிக்குரிய ஜீவியத்தின் மூலம் பயனடைந்தோர் பலர். ஜான் வெஸ்லியின் காலத்தில் துரிதமான போக்குவரத்து வசதிகள் இல்லை. குதிரையின் மீது ஏறியே கடினப் பிரயாணம் செய்யவேண்டியதிருந்தது. ஊழியத்தின் நிமித்தம் அவர் சென்றது 2,50,000 மைல்கள். 40 ஆண்டுகள் இடைவிடாது தேவனுடைய இராஜ்ஜியத்தை உலகில் ஸ்தாபிப்பதற்காகவே ஓடினார். அவர் நான்காயிரத்திற்கும் மேற்பட்ட பிரசங்கங்களை செய்திருக்கிறார். 10 மொழிகளை கற்று அறிந்திருந்தார். தேவநாம மகிமைக்காக 400 புத்தகங்களை எழுதினார். அவருக்கு 83 வயதாகிவிட்டபோதும் அவர் ஓயவில்லை. ஒருநாளைக்கு 15 மணிநேரங்கள் ஊழியத்திற்காக செலவழித்தார். 86 வயது வந்தபோதும் அவர் பிரசங்கிப்பதை நிறுத்தவில்லை. தினமும் இரண்டு முறை அவர் நின்று பிரசங்கித்தார். ஜான் வெஸ்லி அவர்கள் ஆயிரக்கணக்கான மைல்கள் பிரயாணம் செய்து ஊழியம் செய்த நாட்களில் எத்தனையோ இன்னல்களை சந்தித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பார். ஆனால் அவர் ஒருநாளும் சலித்துக்கொள்ள வில்லை. ஆனால் கர்த்தருக்காக ஓடுகின்ற உங்களின் நிலைமை இன்று எவ்வாறு இருக்கின்றது? சற்று சிந் தித்துப் பாருங்கள்.

தேவ பிள்ளைகளே! ஜான் வெஸ்லிக்காக ஜீவனைக் கொடுத்த கிறிஸ்துதான் உங்களுக்காகவும் ஜீவனைக் கொடுத்திருக்கிறார். உங்கள் அன்பு எங்கே? பிரயாசம் எங்கே? ஆண்டவருக்காய் உங்கள் ஜீவியத்தில் எப் படி ஓடிக்கொண்டிருக்கிறீர்கள் என்பதை சற்று ஆராய்ந்து பாருங்கள்.



## 2 இச்சையடக்கத்தோடு ஓடு

இரண்டாவதாக நாம் இச்சையடக்கத்தோடு ஓடி னால் தான் ஓட்டத்தை வெற்றியாய் முடிக்க முடியும். லோத்தின் மனைவியைப் பாருங்கள். லோத்தையும் அவன் குடும்பத்தையும் அழிவிலிருந்து காப்பாற்ற நினைத்த தேவன் நீங்கள் திரும்பி பார்க்காமல் ஓடி உங் கள் ஜீவனை தப்புவித்துக் கொள்ளுங்கள் என்று எச் சரித்தார். லோத்தும் அவன் குமாரத்திகளும் தேவன் சொன்னபடியே திரும்பிப்பார்க்காமல் ஓடி தங்கள் ஜீவனைக் காத்துக் கொண்டனர். ஆனால் லோத்தின் மனைவியோ திரும்பி பார்த்து உப்புத்தூண் ஆனாள். இதை நாம் ஆதியாகமத்தில் வாசிக்கலாம்.

*அவர்களை வெளியே கொண்டுபோய் விட்ட பின்பு அவர் உன் ஜீவன் தப்ப ஓடிப்போ, பின்னிட்டுப் பாராதே இந்த சமபூமியில் எங்கும் நில்லாதே நீ அழியாத படிக்கு மலைக்கு ஓடிப்போ என்றார். (ஆதி 19:17)*

*அவன் மனைவியோ பின்னிட்டுப் பார்த்து உப்புத் தூண் ஆனாள் (ஆதி 19:26)*



லோத்தின் மனைவி ஒரு வேளை அவள் வீடு அழிக்கப்படும்போது ஐயோ என் நகை எரிந்து விடுமே, என் பட்டுப்பு டவை எரிந்து போய்வி டுமே எங்கள் ஆஸ்திகள் எல்லாம் எரிகிறதே என்று அங்கலாய்த்து தான் விட்டு வந்த வீட்டை திரும்பி பார்த்திருப்பாள். இன்றைக்கும் உலகத்தை திரும்பி பார்க்கும் மக் களை எச்சரிக்கும் வகை யில் அந்த உப்புத்தூண் இருக்கிறது.

பழங்கால கிரேக்க கதை ஒன்று உண்டு. ஒரு மிகச்சிறந்த ஓட்டப் பந்தய வீராங்கனைக்கும் மற்றொரு வீரருக்கும் ஒரு கடும்போட்டி ஏற்பட்டது. யார் முதலா வது வருகி றார்கள் என்பதைக் குறித்த பந்தயம் அது. ஓட்டம் ஆரம்பமாகியது. இரண்டு பேரும் முதலில் ஊக் கத்தோடு ஓடினார்கள். கொஞ்ச நேரத்திற்கெல்லாம் அந்த பெண்மணி வீரனை முந்த ஆரம்பித்து விட்டாள். அந்த வீரன் என்ன செய்தான் தெரியுமா? அவளுடைய கவனத்தை கவருவதற்காக தங்க நிறமான ஆப்பிள் பழம் ஒன்றை உருட்டி விட்டான். அது சூரிய ஒளியில் பளப்பளத்துக் கொண்டு அவள் முன்னால் சென்றது. அவள் அதைப் பார்த்தாள் எப்படியாவது அதை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று விரும்பி சற்றே தன் ஓட்டத்தை குறைத்து ஆப்பிள் பழத்தை எடுத்தாள்.

அதற்குள் அந்த வீரன் ஒரு அழகான முத்துக்களால் செய்யப்பட்ட ஆப்பிள் பழத்தை அவள் அருகில் உருட்டி விட்டான். அதையும் எடுத்துக் கொள்ள அவள் திரும்பினாள். அதற்குள் அந்த வீரன் முந்தி ஓட ஆரம்பித்தான். பின்னால் வந்து கொண்டிருக்கிற அவள் தன்னை முந்திவிடுவாளோ என்று எண்ணி, வைரத்தினால் செய்யப்பட்ட ஒரு அழகான ஆப்பிள் பழத்தையும் உருட்டி விட்டான். அவளுடைய கண் அதின் மேலும் பதிந்தது. ஓட்டத்தின் நோக்கத்தை மறந் தாள், இலக்கை மறந்தாள் அதற்குள் அந்த வீரன் ஓட்டத் தில் ஜெயம் பெற்றுவிட்டான்.

நாமும் ஓட்டப்பந்தயத்தில் ஓடிக்கொண்டிருக் கும்போது நம் மன உறுதியைத் திசைதிருப்பும் படியாக சாத்தான் பலவித உபாயங்களை பயன்படுத்துகிறான். கண்களின் இச்சை மாம்சத்தின் இச்சை, ஜீவனத்தின் பெருமை என்ற பாவ ஆசைகளைத் தூண்டிவிடுகிறான். இதனால் இன்று அநேகர் தங்களுடைய அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் தவறவிட்டுவிடுகின்றனர். தங்கள் இலக்கையே மாற்றி ஓடிக்கொண்டிருக்கிறார்கள். இது எத்தனை பரிதாபமானது தெரியுமா? ஆகவே, இன்றே நம் பாவ இச்சைகளை களைந்து விட்டு பரிசுத்தத்துடன் முன்னேறிச் செல்வோம்.

## 3 பாரத்தை இறக்கி வைத்துவிட்டு ஓடு

மூன்றாவதாக பாரத்தை இறக்கி வைத்துவிட்டு எப் படி ஓடுவது? என்று பார்ப்போம். மனுஷன் பாவபாரம் சுமந்து தவிக்கிறான். ஒவ்வொருவரையும் ஏதோ ஒரு கவலை, பாரம், துக்கம் அழுத்திக் கொண்டிருக்கிறது. யாரிடமாவது பகிர்ந்து கொண்டால் தன்னுடைய பாரம் இறங்குமே என்று எண்ணுகிறான். பாரத்தை யார்மேல் இறக்கி வைப்பது என்று அறியாத ஜனங்கள் ஒவ்வொ ருவரிடமும் சென்று தங்கள் பாரத்தை இறக்கி வைக்க முயற்சிக்கிறார்கள். ஆனாலும் இந்த அவசரமான உல கத்தில் மற்றவர்களுடைய துயரங்களை யார் உட் கார்ந்து அமைதியாக கேட்கிறார்கள்.

சிலபேருடைய கவலை என்ன தெரியுமா? எப்படி கவலைப்படாமல் இருக்க முடியும் என்று சொல்லியே கவலைப்படுகிறார்கள். நம்மேல் அக்கறை உள்ளவர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவர் இருக்கிறார் என்பதை மறந்து விடுகிறார்கள்.

பாரத்தை சுமந்து கொண்டு நாம் ஓடும்போது ஓட்டத்தின் வேகம் குறைந்து விடுகிறது. நாம் சென்று அடைய வேண்டிய இலக்கை இழந்து விடுகிறோம். கர்த்தர் ஒரு பெரிய சுமைதாங்கி. அவர் கல்வாரி சிலுவையிலேயே நம்முடைய பாரங்கள் அனைத்தையும் சுமந்து விட்டார்.

*அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால் உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள். (1 பேதுரு 5:7)* என்று வேதம் சொல்லுகிறது.

நம்முடைய பாரங்களை சுமப்பதற்கு இயேசுவானவர் ஆவலாய் இருக்கிறார். ஆகவே, பாரங்கள் அனைத்தையும் அவர்மேல் இறக்கி வைத்துவிட்டு ஓடுங்கள்.

ஒரு சகோதரர் தரிசனம் ஒன்றைக் கண்டார். அந்த தரிசனத் தில் உலகத்திலுள்ள மனுஷர்கள் எல்லாம் பெரிய பெரிய பாரத்தை சுமந்து கொண்டு இருக்கிறதாக கண் டார். சாத்தான் நின்று ஒவ்வொருவருடைய முதுகிலும் பலவிதமான பிரச்சனைகளை பலவித போராட்டங் களை மூட்டை மூட்டையாக பாரம் ஏற்றிக்கொண்டே இருந்தான். மற்றவர்கள் பாரம் சுமக்கிற அதே வேளை யில் அந்த சகோதரனுடைய முதுகிலும்கூட ஏராளமான பாரங்கள் இருந்து கொண்டே இருந்தது. அதை தூரத்தி லிருந்து ஆண்டவர் கவனித்துக் கொண்டே இருந்தார். அன்போடு அவன் அருகிலே வந்து மகனே, நீ ஏன் வீணாக பாரத்தை சுமந்து தவிக்கிறாய் அவைகளை யெல்லாம் என்னிடத்தில் கொடு நான் உன் பாரங்களை ஏற்கனவே கல்வாரி சிலுவையிலேயே சுமந்து விட்டபடியால் இனி நீ அதை சுமக்க தேவையில்லை என்று சொல்லி விடுதலையாக்கினார். *வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். (மத்தேயு 11:28)* என்று இயேசு கிறிஸ்து சொல்கி றார். அன்பு சகோதரனே, சகோதரியே உங்கள் பாரங்கள் அனைத்தையும் இளைப்பாறுதல் தருகிறவராகிய ஆண்டவராகிய இயேசுவின் மீது இறக்கி வைத்து விடுங்கள் அப்பொழுது உங்கள் ஓட்டம் இலகுவாயிருக்கும். நீங்கள் அடைய வேண்டிய இலக்கை எளிதாய் அடையலாம்.


## 4 தரிசனத்தை நோக்கி ஓடு

*அப்பொழுது கர்த்தர் எனக்குப் பிரதியுத்தரமாக: நீ தரிசனத்தை எழுதி, அதைக் கடந்தோடுகிறவன் வாசிக்கும்படிப் பலகைகளிலே தீர்க்கமாக வரை. (ஆபகூக் 2:2)*

உங்கள் வாழ்வில் ஒரு தரிசனம் தேவை. அந்த தரிசனத்தை நோக்கி நீங்கள் ஓட வேண்டும். தேவன் நம் ஒவ்வொருவருக்கும் ஒரு தரிசனத்தைக் கொடுக்க ஆவலாயிருக்கிறார். அதை நாம் அவரிடத்திலிருந்து பெற்றுக் கொண்டு தரிசனத்தை நோக்கி ஒவ்வொரு நாளும் ஓட பழகிக்கொள்ள வேண்டும்.

என் வாழ்விலும் நான் தேவனிடத்தில் பெற்ற தரிசனத்தின்படியே ஓடிக்கொண்டிருக்கிறேன். ஆகவே தான் தேவனுக்காய் செய்யும் காரியங்கள் ஒவ்வொன்றையும் தேவன் பெரியகாரியங்களாக மாற்றி ஆசீர்வதித்துவருகிறார்.

2006-ம் வருடம் நான் இஸ்ரவேல் தேசத்திற்கு சென்றிருந்த போது கெத்செமனே தோட்டத்திற்கு சென்று இயேசு முழங்காற்படியிட்டு ஜெபித்த அதே இடத்தில் நானும் என் முழங்கால்களை முடக்கி ஜெபித்த வேளையில் தான் தேவன் ப்ரீடம் தரிசனத்தை எனக்கு கொடுத்தார். அவரிடத்திலிருந்து தரிசனத்தை பெற்ற நான் சும்மா இருந்து விடவில்லை. அன்றைய நாளிலிருந்து என்னை அர்ப்பணித்து என்னை அழைத்த அழைப்பிற்காய் என் இலக்கை நோக்கி தீவிரமாய் ஓடிக் கொண்டிருக்கிறேன். ஆகையினால் தான் எந்தெந்த இடங்களில் ப்ரீ டம் பெருவிழாக்கள் நடைபெறுகிறதோ அங்கெல்லாம் மகிமையான சாட்சிகளை தேவன் எழுப்பி வருகிறார். இயற்கைக்கு அப்பாற்பட்ட தேவ வல்லமை கூட்டங்க ளில் பங்குபெறுகிற ஒவ்வொருவர் மேலும் கடந்து வருகிறது. பல்லாயிரக்கணக்கான வாலிபர்கள் இயேசு வண்டை வழிநடத்தப்படுகின்றனர். அனுதினமும் எங்கள் அலுவலகத்திற்கு தொலைபேசி வாயிலாகவும், கடிதங்கள் வாயிலாகவும் சாட்சிகள் வந்து குவிந்து கொண்டிருக்கின்றன. இதற்கு காரணம் என்ன? தேவன் எனக்கு கொடுத்த தரிசனத்தை நோக்கி ஓடுவது தான். உங்கள் வாழ்க்கையில் இது வரையிலும் ஒரு தரிசனம் இல்லாமல் நீங்கள் ஓடிக் கொண்டிருந்தால் இப்போதே தேவ சமூகத்தில் முழங்காற்படியிட்டு உங்கள் தரிசனத்தை வாஞ்சித்து கதறுங்கள். தேவன் உங்கள் வாழ்க்கையில் வைத்திருக்கும் திட்டத்தை நிச்சயமாக வெளிப்படுத்துவார். அத்தரிசனத்தைப் பெற்றுக் கொண்டு இன்றே ஓட்டத்தை துவங்குங்கள்.



## 5 ஓட்டத்தை ஜெயமாய் முடிக்கும்படி ஓடு

*ஆகையால், மேகம் போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மை சூழ்ந்துகொண்டிருக்க பாரமான யாவற்றையும் நம்மை சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு விசுவாசத்தை துவக்குகிறவரும், விசுவாசத்தை முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம். (எபிரெயர் 12:1)*

ஆதி அப்போஸ்தலர்களும் பரிசுத்தவான்களும் தங்களுக்கென்று நிர்ணயிக்கப்பட்ட ஓட்டத்தை ஜெயமாய் ஓடி முடித்துள்ளனர். அவ்வாறே நாமும் நமக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுக்கப்பட்ட சந்தர்ப்பங்களை இழந்து விடாமல் நம் ஓட்டத்தை ஜெயமாய் முடிக்கும்படி ஓட வேண்டும். அப்பொழுது தான் நாம் தேவன் முன்பு தலை நிமிர்ந்து நிற்க முடியும். ஆகவே, நம்மை சுற்றி நெருங்கி நிற்கிற எல்லா பாவத்தையும் உதறி தள்ளிவிட்டு நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடி ஓட்டத்தை முடிப்போமாக.

நெப்போலியன் ஒரு தடவை, ஒரு கிராமத்தை போரிட்டு கைப்பற்ற தனது போர் வீரர்களை அனுப்பி வைத்தான். கிராமத்தைக் கைப்பற்றியதும் தனக்குத் தகவல் தெரிவிக்குமாறு கூறிவிட்டு, ஒரு குன்றின் மேல் காத்திருந்தான். நேரம் இருட்டத் தொடங்கியது. அப்பொழுது குதிரை வீரன் ஒருவன் வேகமாக குன்றின் மீது ஏறி வந்தான். நுரைதள்ள ஓடிவந்து நின்றது குதிரை. கீழே குதித்து நெப்போலியனை வணங்கிய அந்த வீரன், ஐயா போரில் வெற்றி பெற்று விட்டோம் என்று பெருமிதத் துடன் கூறினான். மறுவினாடி அவன் வாயிலிருந்து இரத்தம் புரண்டு வந்தது. ஆம்! அவன் தன்னைத் தாக் கிய குண்டினால் ஏற்பட்ட காயத்தைத் தாங்கிக் கொண்டுதான் ஓடி வந்திருந்தான். அதைக்கண்டு திடுக் கிட்ட நெப்போலியன் அவனைத் தூக்கி அணைத்த வாறே, உனக்கு பெரிய காயம் ஏற்பட்டுள்ளது என்று நினைக்கிறேன் என்றான். இல்லை நான் கொல்லப் பட்டு விட்டேன் என்றான் அவன். தனது தலைவன் நெப்போலியன் தனக்காக காத்துக்கொண்டிருப்பார் என்பதை எண்ணின அவன் தன் காயத்தையும் பொறுப்பெடுத்தாமல் வெற்றியின் தகவலைக் கொடுக்க ஓடினான். அவன் தன் தலைவனுக்கு உண்மையாய் இருந்தது போல நாமும் நம் தேவனுக்கென்று உண்மையாய் ஓடி ஓட்டத்தை முடிக்க நம்மை அற்பணிப்போம்.

## 6 பந்தயப்பொருளை அடைய இலக்கை நோக்கி ஓடு



***ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன். (பிலிப்பியர் 3:13, 14)***


தேவன் நமக்கென வைத்திருக்கும் பந்தய பொருளாகிய பரலோகத்தை எப்படியாயினும் சுதந்தரித்துக் கொள்ள வேண்டும் என்பதே நம்முடைய இலக்காக இருக்க வேண்டும். பந்தயப் பொருளை பெற்றுக் கொள்ள உலக ஆசாபாசங்களை வெறுத்து, வேத வசனங்களுக்கு கீழ்ப்படிந்து தேவன்மேல் நம்பிக்கை உள்ளவர்களாய் நாம் ஓடும்போது நிச்சயமாகவே தேவஆவியானவர் நம்மை பரிசுத்தப்படுத்தி பாதுகாத்து, நித்தியத்திற்குள்ளாய் அழைத்துச்செல்வார் என்பதில் சந்தேகமே இல்லை.

அன்பான சகோதரனே, சகோதரியே உலகத்திலே உங்களுக்கு உபத்திரவம் உண்டு என்று சொன்ன இயேசு கிறிஸ்து பாவம் நம்மை மேற்கொள்ளாதபடி பரிசுத்தமாய் உங்களையும் என்னையும் பாதுகாப்பார் என்பது நிச்சயம்.

நீங்கள் இலக்கை தொடரக்கூடாதபடிக்கு பல தடைகள் உங்கள் வாழ்வில் காணப்படலாம். பல மனிதர்கள் உங்கள் ஓட்டத்தை தடைபண்ணலாம். ஆனால் சுடர்களைப் போல பிரகாசிக்கிற நீங்கள் வேத வசனத்தைப் பிடித்துக் கொண்டு ஜெயமாய் முன்னேறிச் செல்லுங்கள். நம்முடைய இலக்கு பந்தய பொருளை அடைய வேண்டும் என்பதாக மாத்திரமே இருக்கவேண்டும்.

ஒரு விசை ஒரு பக்தியுள்ள வயோதிப இராஜாவை எதிர்த்து இளவரசன் ஒருவன் படையெடுத்து வந்தான். இரக்கமுள்ள அந்த வயோதிப இராஜா அந்த இளவரசனுக்கு ஒரு பாடம் கற்பிக்க எண்ணி தன் படைத்தளபதிகளை அனுப்பி, அவனை உயிரோடு பிடித்து வரும்படி கட்டளையிட்டான். அப்படியே அவனை உயிரோடு பிடித்து வந்தனர். அப்பொழுது இளவரசன் இராஜாவுக்கு முன்பாக நின்று தன் உயிருக்காக கெஞ்சி மன்றாடி தன்னை மன்னிக்கும்படி கேட்டுக் கொண்டான். அதற்கு ஒரு நிபந்தனை இருக்கிறது என்றார் வயோதிப ராஜா. விளிம்பு வரை தண்ணீரால் நிரப்பப்பட்ட பாத்திரம் உன் கையில் கொடுக்கப்படும் அதை முக்கிய சாலை ஒன்றின் வழியாக ஒரு சொட்டு தண்ணீர் கூட கீழே சிந்தாமல் குறிப்பிட்ட நேரத்திற்குள் ஒரு மைல் தூரம் கொண்டு செல்ல வேண்டும். ஒரு துளி கீழே கொட்டினாலும் கூட என் படைவீரர்கள் உன் தலையை சீவி விடுவார்கள். வெற்றியோடு நீ முடித்து விட்டால் உனக்கு விடுதலை என்று நிபந்தனை விதித்தார். குறிப்பிட்ட நேரமானதும் இலட்சக்கணக் கான மக்கள் அந்த சாலையின் இருபகுதிகளிலும் நின்று கொண்டிருந்தனர். பேரரசர் முன்னிலையில் முழுவதும் தண்ணீர் நிரப்பி, ததும்பி கொண்டிருக்கும் பாத்திரம் இளவரசன் கையில் கொடுக்கப்பட்டது. சாலையின் ஒரு பகுதியில் நின்றிருந்த மக்கள் இளவரசனை உற்சாகப்படுத்தினர், மறுபக்கத்தில் இருந்தவர்களோ கேலியும் பரியாசமும் செய்து கூச்சலிட்டனர். எனினும் எதையும் பொருட்படுத்தாமல் தண்ணீரிலேயே முழுகவனமும் செலுத்தி ஓட்டத்தை வெற்றியோடு முடித்தான் இளவரசன்.

இளவரசனை பாராட்டிய பேரரசன் உன்னைக் கேலி செய்தவர்களுக்கு நீ தண்டனை வழங்கலாம். உற்சாகப்படுத்தினவர்களுக்கு நீ நன்றி சொல்லலாம் என்றான். அதற்கு அவன் என் கவனமெல்லாம் தண்ணீரின் மேல் தான் இருந்தது. நான் யாருடைய சத்தத்தையும் கவனிக்கவில்லை என்றான். இதைக் கேட்ட அரசன் அவனை பாராட்டி ஒரு ஆலோசனையும் தந்தான். இளவரசனே பாத்திரத்தில் உள்ள தண்ணீர் தான் உன் சரீரத்தில் உள்ள ஆத்துமா. ஜீவிய நாட்களிலே உன் ஆத்துமாவின் மேல் கண்ணும் கருத்துமாய் இருந்து கடைசியில் அதை உன் சிருஷ்டிகரிடம் ஒப்படைக்க வேண்டும். உன்னை புகழ்வோரைக் கண்டு பெருமை கொள்ளாதே, இகழ்வோரைக் கண்டு சோர்ந்து போகாதே. ஆத்துமாவில் மாத்திரம் உன் கவனத்தை வை என்றார்.




நம் கண் களை இயேசு கிறிஸ்துவின் மீது பதித்து ஓடுவோம். ஓட்டத்தை தொடங்கினவர் உங்களை ஜெயமாய் நடத்திடுவார். இன்றைய நாளிலிருந்து அவர் உங்களுக்கென வைத்திருக்கும் பரிசுப் பொருளாகிய பரலோகத்தைப் பெற்றுக் கொள்ள உங்கள் இலக்கை நோக்கி ஓடுங்கள்.

**நீங்கள்.....**

**எழுந்தால் - இரட்சிப்பு**
**நின்றால் - தரிசனம்**
**ஓடினால் - பரிசு**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடித ஊழியத்தில் தேவனின் அற்புத கிரியைகள்

## திருமண தடையை மாற்றின தேவன்

என் பெயர் பொன் மலர். கர்த்தர் என் வாழ்வில் செய்த அற்புதத்தை சாட்சியாக எழுதுகிறேன். எங்கள் வீட்டில் என் திருமணத்திற்காக வரன் பார்த்து வந்தார்கள். எனினும் எனக்கு ஏற்ற வரன் அமையாமல் நாட்கள் கடந்து கொண்டே சென்றது. ஆகவே, என் மனக்கவலையை எடுத்துக்கூறி சகோதரர் ஆல்வின் தாமஸ் அவர்களுக்கு கடிதம் எழுதினேன். சகோதரர் அவர்களும் எனக்காக ஜெபித்து தேவனிடத்திலிருந்து வார்த்தைகளைப் பெற்று பதில் எழுதியிருந்தார்கள். அதில் கர்த்தர் ஏற்ற காலத்தில் தீவிரமாய் காரியங்களை நடப்பிப்பார் என்ற வசனத்தை குறிப்பிட்டு எழுதியிருந்தார்கள். நாங்கள் குடும்பமாய் அந்த வசனத்தை விசுவாசித்து, ஒவ்வொரு நாளும் ஜெபித்து வந்தோம். கர்த்தர் தாம் சொன்னபடியே அவருடைய கிருபையினால் நல்ல வாழ்க்கைத் துணையை எனக்கு ஏற்படுத்தித் தந்தார். ஜூலை 4 ஆம் தேதி எங்கள் நிச்சயதார்த்தம் ஆசீர்வாதமாக நடந்து முடிந்தது. என்னுடைய திருமணம் வரும் அக்டோபர் மாதம் 5ஆம் தேதி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. கர்த்தர் உங்கள் ஜெபத்தை கேட்டு என் வாழ்க்கையில் செய்த மிகப்பெரிய அற்புதத்திற்காக ஆண்டவருக்கு துதி கனம் மகிமையை செலுத்துகிறேன். தொடர்ந்து சகோதரருக்காகவும், அவருடைய ஊழியங்களுக்காகவும் நாங்கள் குடும்பமாய் ஜெபித்து வருகிறோம்.

- பொன் மலர்

## பூரண சுகம் கொடுத்த தேவன்

என் பெயர் J. ராபர்ட் மனோபா. என் தகப்பனாருக்கு திடீரென்று இடுப்பு வலி வந்தது. அது நாளுக்கு நாள் அதிகமாகி, அவர் எழுந்து உட்காருவதற்கே மிகவும் சிரமப்பட்டார். இதனால் ஏதாவது நிலைமை மோசமாகி வேலைக்கு செல்ல முடியாமல் போய்விடுமோ என்று மிகவும் என் அப்பா பயந்தார். குடும்பம் முழுவதுமே அவரது நிலைமையைக் கண்டு மிகவும் பயந்தோம். ஆஸ்பத்தரியில் அவருக்கு கொடுத்த மருந்துகளெல்லாம் தற்காலிகமாக வலியைக் குறைத்ததே தவிர, மீண்டும் மீண்டும் அந்த வலி அவரை துயரப்படுத்திக்கொண்டே இருந்தது. அந்த வேளையில் தான் நான் சகோதரர் ஆல்வின் தாமஸ் அவர்களுக்கு என் தகப்பனாருக்காக ஜெபம் செய்யும்படி கடிதம் எழுதினேன். சகோதரர் அவர்களும் ஜெபித்து எனக்கு பதில் கடிதம் எழுதியிருந்தார்கள். அக்கடிதம் என் கைகளில் கிடைத்த அந்த நாளிலேயே என்னுடைய தகப்பனார் பரிபூரண சுகம் பெற்றார். இப்போது அவரால் நன்றாக எழும்ப முடிகிறது, நடக்க முடிகிறது. இன்றைக்கு மிகவும் சந்தோஷமாக தன்னுடைய வேலைக்குச் சென்று வருகிறார். எங்கள் குடும்பத்திற்காகவும் விரைவாக என் அப்பா சுகம் பெற வேண்டுமென்று மன்றாடி ஜெபித்த சகோதரர் ஆல்வின் தாமஸ் அவர்களுக்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

- J. ராபர்ட் மனோபா

அன்பானவர்களே! நீங்களும் உங்கள் வாழ்வில் சந்திக்கும் போராட்டங்கள், பிரச்சனைகள் மற்றும் சரீர பாடுகள் போன்ற பல்வேறு ஜெபத்தேவைகளுக்காக ஜெபிக்க விரும்பினால் உங்கள் ஜெப விண்ணபங்களை எங்களுக்கு அனுப்பி வையுங்கள். அதில் உங்களின் தெளிவான முகவரியுடன் தொலைபேசி எண்ணையும் குறிப்பிட்டு எழுதுங்கள். மேலும் தேவ சித்தத்தை அறியவும் தேவ ஆலோசனைகளைப் பெற விரும்பினாலும் எங்களுக்கு எழுதுங்கள். சகோதரர் ஆல்வின் தாமஸ் அவர்கள் ஊழியத்தின் நிமித்தம் உலகின் எந்த பாகத்தில் இருந்தாலும் நீங்கள் அனுப்பும் ஜெப விண்ணப்பங்களை மின்னஞ்சல் மூலம் பெற்றுக் கொண்டு உங்களுக்காய் பாரத்துடன் ஜெபித்து உடனுக்குடன் பதில் எழுதுவார். ஆகவே, எங்களை இன்றே கடிதம் மூலம் தொடர்பு கொள்ளுங்கள். கர்த்தர் உங்களுக்கு அற்புதம் செய்வார் நீங்கள் ஆசீர்வதிக்கப்படுவது நிச்சயம்.

**உங்கள் ஜெப விண்ணபங்களை அனுப்ப வேண்டிய முகவரி :**

**சகோ.ஆல்வின் தாமஸ்**
**ரூஹா ஊழியங்கள்**
**155, பெப்சன் கோர்ட்,**
**2வது தளம், ஆற்காடு ரோடு,**
**கோடம்பாக்கம், சென்னை - 24.**
e-mail : alwinthomas@ruah.in
facebook.com/pastoralwinthomas
twitter.com/alwinthomas

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீ உடைக்கப்பட்ட உருவாக்கப்



## அன்பு சகோதரியே -

தேவன்தாமே இவர்களுடைய கண்ணீர் யாவையும் துடைப்பார். (வெளி 7:17)

தினம், தினம் கண்ணீருக்குள் பயணம் செய்யும் நீங்கள் ஆவி ஆத்துமா சரீரம் இவற்றுள் உடைக்கப்பட்ட பாத்திரமாக நலிந்து போகும் நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறீர்களா? கவலைப்படாதிருங்கள். உங்கள் நிலையை தேவன் அறிந்திருக்கிறார். இந்த மாதத்திலிருந்து உங்களை உடைத்துக் கொண்டிருக்கும் இக்கட்டான பாடுகளிலிருந்து விலக்கிக் காத்து புதிய விடுதலையை கொடுக்கப்போகிறார். நீங்கள் தேவனுடைய கரங்களில் பொற்கிரீடமாக விளங்கும் மாதமாக இந்த மாதம் இருக்கப்போகிறது. உங்கள் உடைப்புகள் சீராகி நீங்கள் புதிய வாழ்வுக்குள் பிரவேசிக்கப் போகிறீர்கள். அப்படி நீங்கள் பிரவேசிக்கும் வேளையில் தேவன் உங்களுக்கு சமீபமானவராக இருந்து தம்முடைய ராஜ கீரிடமாக உங்களை தம்முடன் வைத்துக் கொள்ளப் போகிறார். களிப்போடு இந்த மாதத்தை நீங்கள் துவக்கப் போகிறீர்கள். வாழ்க்கையில் நீங்கள் அனுபவித்த துன்பங்களுக்கெல் லாம் ஒரு விடியல் பிறக்கப்போகிறது. இனி நீங்கள் இருளைக் காணாமல் வெளிச்சத்திற்குள் நடக்கப் போகிறீர்கள்.

## 1. குடும்பத்தில் ஏற்படும் உடைப்பு

தினமும் மதுவைக் குடித்துவிட்டு குடும்பத்தையே உடைக்கும் கணவனால் துன்பம் கொள்ளுபவர்கள் இந்த உலகத்தில் ஏராளம். மருமகள் செய்கின்ற காரியங்கள் சிறப்பாக அமைந்தாலும் அதிலும் குற்றம் சொல்லும் மாமியார்கள் அநேகம் பேர். மருமகள் புகுந்த வீட்டுக்கு வரும்போது கழுத்து கை நிறைய நகைகளோடு வருவாள். அதைக் காணுகின்ற மாமி யார்கள் இதுபோல் தான் பெற்ற பெண்ணுக்கு இல்லையே என்ற ஆதங்கத்தில் மருமகளை துச்சமாக எண்ணி கடும் சொற்களால் குளிப்பாட்டுவார்கள். அது போன்ற சூழ்நிலைகளில் நீங்களும் கூட தள்ளப்பட் டிருக்கலாம். கவலைப்படாதிருங்கள். உங்கள் நிலை மையை மாற்ற ஒரே வழி தான். அது தான் நம் ஆண்டவர். இன்னும் சிலபேர் அதாவது மருமகளாய் வந்தவுடன் பெற்ற அன்னை பேணி வளர்த்த தந்தை இவர்களை விட்டு விட்டு தன் கணவனை தனிக்குடித்தனம் செல்ல வேண்டுமென்று அடம்பிடித்து அதை நிறைவேற்றியும் கொள்வார்கள். அதுபோன்ற சூழ்நிலைக்குள் மாட்டித்தவிக்கும் வயதுகடந்த மாமியாராக கூட நீங்கள் இருக்கலாம். இந்த நிலைமை மாறிட என்னதான் வழி? வயதான காலத்தில் பிள்ளைகள் எல்லாரும் உங்களை தனிமரமாக்கி முதியோர் இல்லங்களில் சேர்த்து விட்டார்களே என்று உடைக்கப்பட்டு விட்டீர்களா? உங்களுக்குள் நீங்கள் உடைந்து உடைந்து விரிசல் அதிகமாகி உதிர்ந்து விழுவதற்குள் உங்களை அழகாக வனைவதற்கு ஒருவர் இருக்கிறார் என்பதை தெரிந்து கொள்ளுங்கள் அவர்தான் நம் அருள்நாதர் இயேசு. அவரையே நீங்கள் நாடினால் போதும். உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும். நீங்கள் புதுவாழ்வை காண்பீர்கள்.

இப்படித்தான் ஒரு ஊரில் மேரி என்பவர் தன் கணவரோடு மிகவும் சந்தோஷமாக வாழ்ந்து வந்தார். காலப் போக்கில் அவர்களுக்கு ஒரு மகனும், மகளும் பிறந்தார்கள். வாழ்க்கை இன்னும் சந்தோஷமான பாதையை நோக்கி சென்றது. ஒருநாள் வந்தது மேரியின் குழந்தைகளுக்கு பாடம் சொல்லி கொடுக்க விமலா என்கிற பெண் தினமும் மாலையில் வீட்டுக்கு வந்து செல்வது வழக்கமானது. இப்படியாக காலம் செல்ல செல்ல

ஒருநாள்...... கடைக்குச் சென்றுவிட்டு வீட்டுக்கு திரும்பிய மேரி வீடு மூடியிருப்பதைப் பார்க்கிறாள். உள்ளே இருந்து இரண்டுபேர் சிரித்து பேசுகின்ற ஒலி கேட்கிறது. கதவை திறந்து பார்க்க அங்கே மேரி கண்ட காட்சி அவளை சுக்குநூறாக உடைத்துப்போட்டது. மேரியின் கணவரும், டீச்சர் விமலாவும் மிகவும் நெருக்கமாக பேசிக்கொண்டிருப்பதைப் பார்த்தார். என்ன இது என்று கணவனிடம் கேட்ட மேரியை கணவன் அடித்து விட்டு வெளியே செல்கிறான். ஒரே வாரத்தில் மேரியின் கணவன் விமலாவுடன் குடும்பம் நடத்த புறப்பட்டு விட்டான்.

அவருடைய தயவோ நீடிய வாழ்வு; சாயங்காலத்தில் அழுகை தங்கும், விடியற்காலத்திலே களிப்புண்டாகும். (சங் 30:5)

தனிமரமாய் விடப்பட்ட மேரி கலங்கிப்போனார். தினமும் ஆலயத்திற்கு செல்வார். ஆண்டவரிடம் அன்னாளைப் போல கண்ணீரோடு தன் மனதை ஊற்றி ஜெபிக்க ஆரம்பித்தார். என்ன நடந்தது?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாத்திரம் அல்ல பட்ட பாத்திரம்

சகோதரி
ஜாய் ஆல்வின்



மேரி எதிர்பாராத ஒருநாளில் அவளது கணவன் வீட்டுக்கு வந்து சேர்ந்தான். இது எப்படி நடந்தது? என்று கேட்டபோது அதற்கு அவ ளது கணவன் சொன்ன பதில் மிகவும் வேடிக்கையாக இருந்தது.

மேரியின் கணவன் விமலாவோடு இரண்டு மாதம் வாழ்ந்திருக்கிறான். அதற்குள் அவர்களுக்கு வாழ்க்கை கசந்து போயிருக்கிறது. திடீரென்று ஒருநாள் விமலா வீட்டிலிருந்து காணாமல் போயிருக்கிறாள். அக்கம் பக்கம் விசாரித்தபோது அவள் வசதியான வேறொருவனோடு வாழுகிறாள் என்றார்கள். சம்மட்டி அடி வாங்கியவனைப் போல மீண்டும் மேரியைத் தேடி அந்த கணவன் வந்திருக்கிறான். ஆம்! கண்ணீரைக் கண்ட தேவன் மனமிறங்கினார்.

ஒருவேளை நீங்கள் கணவனால் கைவிடப்பட்டவராக இருக்கலாம். உங்கள் கணவர் மீண்டும் உங்களோடு வாழ்க்கையை தொடரவேண்டுமே என்று ஆண்டவரிடம் மன்றாடி ஜெபிக்கலாம். அப்படி நீங்கள் ஜெபம் செய்யும்போது தேவன் அதற்கு செவிகொடுத்து உங்கள் தேவைகளை பூர்த்தி செய்வார். உங் களை விட்டு பிரிந்துபோன கணவர் உங்களைத் தேடி ஓடிவரச் செய்வார். வாழ்க்கையின் உடைப்புகளும் சரி செய்யப்பட்டு ஒரு புதிய கோணத்தில் உங்கள் வாழ்க்கை இனிமை கலந்ததாக அமையும்.

## 2. ஆண்டவரோடு இருக்கும் உறவில் விரிசல்

மனதளவில் எழுகின்ற வியாகுலங்கள், கண்ணீரின் கறைகள், இதயத்தால் நொறுங்குண்டு அதனால் ஏற்படும் விரிசல்கள் இவைகளினால் ஏற்படுகின்ற வலிகள் உங்களை உடைத்துப் போடலாம். நொறுங்கி போன நிலையில் சோர்ந்து போன உங்களுக்கு தாழ்வு மனப்பான்மை கூட ஏற்பட்டிருக்கலாம். அதுகூட உங் களை ஆண்டவரிடத்திலிருந்து விலகிபோக வைத்திருக்கலாம்........ இடம் கொடுக்காதீர்கள். அப்படி நீங்கள் இடம் கொடுக்கும்பட்சத்தில் உங்களுக்கும் ஆண்டவருக்கும் இடையே ஒரு இடைவெளி வரும் அல்லவா? அந்த இடைவெளி போதும் சாத்தான் உங்களை நெருங்குவதற்கும் உங்களை மாற்றுவதற்கும்.

உறவுகளால் உடைக்கப்பட்டு பாலைவனத்தை நோக்கி தன் கைக்குழந்தையோடு ஓடிய ஆகார் மனதளவில் உடைந்துபோனாள். தன்னுடைய வாழ்க்கையும் வளமான காலங்களையும் தொலைத்துவிட்டு உடைந்த பாத்திரமாக ஓடிய ஆகாரை தேவனின் கரம் தாங்கியது. அதனால் இஸ்மவேலின் வம்சம் தழைத்து பெருகியது.

நாமும் கூட நம் வாழ்க்கையின் இனிமையான காலங்களில் சுகித்து உணர்ந்தவைகளை தொலைத்துவிட்டு அதனால் உடைந்து போனவர்களாக இருக்கலாம். சோர்ந்து போய் துவண்டு விழுகின்ற போது நமக்கு கரம்கொடுத்து காத்திட நம்முடைய தேவாதி தேவன் இருக்கிறார் என்பதை மறக்காமல் அவரை நாடிச் செல்வோம் என்றால் உடைந்து போன நம்முடைய கடந்த காலங்கள் நிகழ்காலங்கள் எல்லாவற்றையும் அவர் சரிசெய்து நம்மை அமைதியான வாழ்க்கைக்கு அழைத்துச் செல்வார்.

சில நேரங்களில் உங்கள் குடும்பங்களில் வேண்டாத பிரச்சனைகளை சாத்தான் கொண்டுவருவான். அதன் நிமித்தமாக உங்களை சுற்றியுள்ளவர்கள் உங் களை குற்றவாளியாக்கி, கேவலமாக நடத்துகின்ற சூழ்நிலை உருவாகலாம். அப்போது மனதளவில் சோர்ந்து போய் நிற்கும் நீங்கள் தேவனை தேடாமல் விலகி நிற்கலாம். இப்படியெல்லாம் வேண்டாத பிரச்சனைகள் என்னை தேடி வருகிறதே எதற்கு நான் அவரை தேட வேண்டும் என்று கூட நீங்கள் எண்ணலாம். அப்படி நீங்கள் விலகிநின்றால் சாத்தான் உங்கள் சமீபமாக வந்து நிற்பான். பிரச்சனைக்கு ஒரு முடிவே கிடைக்காது. அந்த சூழ்நிலையிலும் நான் உடைக்கப்பட்டாலும் என்னை சரிசெய்ய என் தேவன் சித்தமாயிருக்கிறார் என்று அவரை நோக்கி நீங்கள் ஓடுவீர்கள் என்றால் பிரச்சனைகளை துரப்போட்டு சாத்தானை அதிரச்செய்ய நம் ஆண்டவர் சித்தமாக இருக்கிறார். கவலைப்படாதீர்கள் இனி நீங்கள் உடைக்கப்பட்ட பாத்திரமாக இருக்கப்போவதில்லை உருவேற்றிய பாத்திரமாக மின்னப்போகிறீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயப்படாதே, நீ வெட்கப்படுவதில்லை; நாணாதே, நீ இலச்சையடைவதில்லை; உன் வாலிபத்தின் வெட்கத்தை நீ மறந்து, உன் விதவையிருப்பின் நிந்தையை இனி நினையாதிருப்பாய் (ஏசாயா 54:4)

ஒரு ஜமீன்தார் வீட்டில் எஸ்தர், ரூபி என்கிற இரண்டு சிறுமிகள் வேலை செய்துவந்தார்கள். ஒருநாள் எஸ்தர் தண்ணீர் குடத்தை எடுத்துக் கொண்டு அரண்மனையின் பின்புறம் உள்ள குளியலறைக்கு செல்கிறாள். தலையில் இருந்த தண்ணீர் குடத்தை கீழே வைத்து விட்டு நிமிர்ந்த போது குளியலறை மாடத்திலிருந்த ஏதோ ஒன்று மின்னலைப்போல ஒளிர்ந்தது. அருகே சென்று பார்க்க அது ஒரு வைர மோதிரம். சுற்றும் முற்றும் திரும்பி பார்த்தாள் எஸ்தர். தூரத்தில் ரூபி மட்டும் மாடுகளுக்கு வைக்கோல் போட்டுக்கொண்டிருப்பது தெரிந்தது. திருப்தியோடு தலையசைத்துக்கொண்டு மோதிரத்தை எடுத்து வைத்துக் கொண்டாள்.

மறுநாள் -

அரண்மனையின் நடுக்கூடத்தில் வேலைக்காரர்கள் அத்தனை பேரும் கூடியிருக்க ஜமீன்தார் கோபத்துடன் வைரமோதிரத்தை யார் எடுத்தது என்று கேட்டுக்கொண்டிருந்தார். எல்லோரிடத்திலும் நான் இல்லை என்ற பதிலே வந்தது. நேற்று பின்னால் யார் வேலை செய்தது என்று கேட்டபோது தான் சென்றதை மறைத்து விட்டு ரூபி தான் வேலை செய்தாள் என்று எஸ்தர் சொன்னாள். அங்கிருந்த எல்லாரும் ரூபியை வாய்க்கு வந்தபடியெல்லாம் பேசினார்கள். உடைக்கப்பட்ட கண் கலங்கிய ரூபி கண்களை மூடி ஜெபித்தாள். சிறிது நேரத்தில் ஜமீன்தார் ஒரு முடிவெடுத்தார். அந்த வைர மோதிரம் தன் அப்பாவுடையது என்றும் அதைக் கண்டுபிடிப்பவர்களுக்கு தனது தோட்டத்தில் பாதியை இனாமாக கொடுப்பதாக அறிவித்தார். ஆசை யாரை விட்டது எஸ்தர் உடனே அங்கிருந்து நழுவினாள் தனது அறையிலிருந்த அந்த வைர மோதிரத்தை கைகளில் எடுத்துக் கொண்டு நிமிர்ந்த போது வாசலில் -



ஜமீன்தாரும் மற்றவர்களும் நிற்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்தாள். தன் குற்றத்தை ஒப்புக் கொண்டாள்.

அன்பு சகோதரியே, ஆண்டவரை நோக்கி ரூபி செய்த சில வினாடிகள் ஜெபம் எப்படி கேட்கப்பட்டது பார்த்தீர்களா? அவள் மட்டும் சூழ்நிலையின் கைகளில் அகப்பட்டு தேவனைத் தேடாமல் இருந்திருந்தால் நிலைமை என்னாகியிருக்கும். எல்லோரும் குறை சொல்லி உடைக்கப்பட்ட பாத்திரமாக ரூபி தனித்து நின்றாலும் என் நிலையை மாற்றிட என் தேவன் இருக்கிறார் என்கிற நம்பிக்கை அவளை அழகான பாத்திரமாக சீர்திருத்தி உண்மையை நிலைநாட்டியது. நேர்மைக்கு நம் ஆண்டவர் மகுடம் சூட்டினார். அதனால் அவளுக்கும் தேவனுக்கும் இடையே உரு வாகவிருந்த விரிசல் ஆரம்பத்திலேயே அழிக்கப்பட்டது.


**தெபோராள் பெண்கள் கூடுகை**

ஒவ்வொரு செவ்வாய்கிழமை காலை 11.00 முதல் மதியம் 12.30 வரை

இடம் : ரூஹா எழுப்புதல் தேவாலயம், 155, பெப்சன் கோர்ட், ஆற்காடு ரோடு, கோடம்பாக்கம், சென்னை-24.


## 3. சரீர சம்பந்தமான விரிசல்

ஒரு சகோதரி இருந்தார்கள். அவர்களுக்கு இரண்டு மகன்களும் ஒரு மகளும் இருந்தார்கள். அவரது கணவர் அதிகமாக சம்பாதித்ததினால் கேளிக்கைகளில் ஈடுபட்டு தன் குடும்பத்தைவிட்டு தள்ளியிருந்தார். அந்த சகோதரி சிறிய வேலையை செய்துகொண்டு அதில் வரும் சொற்ப வருமானத்தினால் பிள்ளைகளை படிக்க வைத்து அன்றாட ஜீவனையும் சிரமத்துடன் நடத்தி வந்தார். இந்த சூழ்நிலையில் அந்த சகோதரிக்கு திடீரென்று கேன்சர் வியாதி வந்தது. அந்த பாதிப்போடு மிகவும் துன்பத்திற்குள்ளாக வாழ்க்கை தொடர்ந்து மகளின் திருமணம் நிச்சயமானபோது பாரம் அதிகமானது. ஒரு பக்கம் மருத்துவ செலவு மற்றொரு பக்கம் மகளுக்காக சேமித்த சேமிப்பு வைத்தியத்திற்கு சிறுக சிறுக செலவாக கவலை மேலும் கூடியது. வாலிப வயதில் உள்ள இரண்டு மகன்களோ குடும்ப பொறுப்பில்லாமல் விளையாட்டாக காலம் தள்ளிக்கொண்டிருந்தார்கள். உடைக்கப்பட்ட குடும்பமாக இருந்தாலும் சரீரத்தில் பெலவீனம் வந்து தாக்கினாலும் அவர்கள் தேவனைப் பற்றிக்கொள்வதில் தவறவே இல்லை.

என் புலம்பலை ஆனந்த களிப்பாக மாறப்பண்ணினீர்; என் மகிமை அமர்ந்திராமல் உம்மைக் கீர்த்தனம் பண்ணும்படியாக நீர் என் இரட் டைக் களைந்து போட்டு, மகிழ்ச்சியென்னும் கட்டினால் என்னை இடைக்கட்டினீர். (சங் 30:11) என்ற வசனத்திற்கேற்ப அவர்களின் மன்றாட்டு ஜெபத்தையும் அவர்களின் கண்ணீரையும் கண்ட தேவன் இரக்கங்கொண்டு அவர்களை குணப்படுத்தினார். தடைப்பட்டிருந்த மகளின் திருமணம் கோலாகலமாக நடந்தேறியது. கணவரது போக்கிலும் தேவன் மாற்றத்தைக் கொண்டு வந்து மீண்டும் அந்த குடும்பத்தில் கொண்டு வந்து சேர்த்தார்.

பிரியமானவர்களே, பாடுகளும் பிரச்சனைகளும் குடும்பத்தை நெருக்கி வாட்டும்போது சோர்வடைந்து விடாமல் தேவனையே பற்றிக் கொள்ள வேண்டும். மரணத்திற்கேதுவான நோய் உங்களை தாக்கினால் உயிர்ப்பிக்க நம் தேவன் சித்தமாயிருக்கிறார்.

அன்றியும், இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார். (ரோமர் 8:11)

எந்த சத்துருவும் உங்களை சேதப்படுத்த முடியாது காரணம் நீங்கள் தேவனை தேடும்போது தேவ ஆவியானவரின் பரிசுத்த கரம் உங்கள் மேல் நிழலாய் நிற்கும். கலங்கி தவிக்கும் உங்கள் உடைந்த உள்ளத்தின் வேண்டுதல்களையும் தேவைகளையும் ஆண்டவர் நிச்சயமாக நிறைவேற்றி வைப்பார். உங்களை சுற்றி நின்று கண்ணீர் வடிக்கும் உறவுகளின் கண்ணீரை ஆனந்தம் கொள்ள செய்ய அவர் ஒருவரால் தான் முடியும். சூழ்நிலைகளை மாற்றி சுகத்தை அருளிச் செய்வார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுமைப்பட்டவளே, பெருங்காற்றில் அடிபட்டவளே, தேற்றரவற்றவளே, இதோ, நான் உன் கல்லுகளைப் பிரகாசிக்கும்படி வைத்து, நீலரத்தினங்களை உன் அஸ்திபாரமாக்கி, உன் பலகணிகளைப் பளிங்கும், உன் வாசல் களை மாணிக்கக் கற்களும், உன் மதில்களையெல்லாம் உச்சிதமான கற்களுமாக்குவேன். (ஏசாயா 54:11, 12)

சந்தர்ப்ப சூறாவளியினால் குடும்பம் சிதைக்கப்பட்டு அதனால் நீங்கள் உடைக்கப்பட்டாலும் எண்ணற்ற இடர்களினாலும் அதனால் வருகின்ற இடைவெளிகளினாலும் இழுத்துச் செல்லப்பட்டு காலங்களின் கரங்களில் அடி வாங்கி ஆண்டவரோடு இருக்கும் உறவில் விரிசல் ஏற்பட்டாலும் வியாதிகள் முற்றுகையிட்டு சரீரத்தை வேதனைக்குள் தள்ளினாலும் ஒட்டு மொத்த வாழ்க்கையிலும் நீங்கள் உடைக்கப்பட்ட பாத்திரமாக சிதைந்து போனாலும் உங்களை உருவாக்கிட ஒருவர் உண்டு என்பதை மறந்து விடாதீர்கள். சிலுவையின் பாடுகளை எண்ணிப்பாருங்கள் நம்பாடுகள் தூசிப்போல் காட்சியளிக்கும். வேதனையின் விளிம்பில் கூட தேவனை மறக்காமல் இருக்க உங்களை தயார்படுத்திக் கொள்ளுங்கள். அப்போது உங்கள் வாழ்விலும் உடைக்கபட்டதெல்லாம் ஒன்று சேரும். நீங்கள் வாழ்ந்த வாழ்க்கைக்கும் ஒரு வெற்றி மகுடம் சூட்டப்படும்.

## Benny's Cross Word Puzzle No.1 Answer




Dear Friends, நீங்க நிறைய பேர் சரியான விடையை எழுதி அனுப்பி இருந்தீங்க. எனக்கு ரொம்ப சந்தோஷம். அதுல குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்று பேருக்கு நான் பரிசளிக்கிறேன் !

பரிசு பெற்றவர்கள் ***B.M. Don - Trichy, R. Robin Joshuva - Tuticorin, B. Ebin John - Nazareth.***







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 24 மணிநேர 91-98847 10777, 044-2372 8822, 044-24843884

# தொலைபேசிவழி பிரார்த்தனை சேவையின் மூலம் அற்புதங்கள்

## மகனுக்கு பரிபூரண சுகம்

கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதரர் அவர்களுக்கு,

திருப்பூரில் இருந்து J. ஜெஸிந்தா ஜுவானி எழுதிக் கொள்வது, எனது தங்கையின் மகன் பெயர் I. யுவன் அஸ்பாஸ் அவனுக்கு 4 1/2 வயது ஆகிறது. நன்றாக இருந்த என் மகனுக்கு திடீரென்று முதுகு தண்டுவடபகுதியில் பெலவீனம் ஏற்பட்டது. மருத்துவர்களிடம் அவனை அழைத்துச் சென்றபோது, உடனடியாக முதுகுத்தண்டு பகுதியில் ஆபரேஷன் செய்யவேண்டும் என கூறிவிட்டனர். அதுமட்டுமின்றி எப்போது வேண்டுமானாலும் இரண்டு கால்களும் செயலிழக்கலாம் என்றும் கூறினார்கள். இதைக்கேட்ட நாங்கள் கண்ணீர்விட்டு கதறினோம். எங்களுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. அவன் சிறுபிள்ளையாய் இருப்பதினால், ஆபரேஷனுக்கு எப்படி ஒத்துழைப்பு கொடுப்பானோ என்று கவலைப்பட்டோம். ஓடி, ஆடி விளையாட வேண்டிய வயதில்அவன் முடங்கி கிடக்கிறானே என்று வேதனையடைந்தோம். ஆபரேஷனுக்குப் பிறகு அவன் எப்படி இருப்பானோ என்று நாங்கள் அங்கலாய்த்தோம். இந்நிலையில், ரூஹா ஊழியத்தோடு தொடர்பு கொண்டு ஜெபித்தோம். அங்கிருந்த ஜெபவீரர் மிகுந்த பாரத்துடன் மகனுக்காக ஜெபம் ஏறெடுத்தார். ஜெபத்திற்கு பதில் கொடுக்கிற தேவன் எங்களுக்கு மிகப்பெரிய அற்புதம் செய்தார். மகனுக்கு ஆபரேஷன் நல்லபடியாக நடக்க தேவன் கிருபை செய்தார். ஆபரேஷன் முடிந்த 4 நாட்களுக்குள் அவன் எழுந்து நடக்கவும், விளையாடவும் மாடிப்படியில் ஏறி இறங்கவும் கர்த்தர் கிருபை செய்தார். மகன் ஓடி விளையாடுவதைப் பார்த்து நாங்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. அவன் கால்களுக்கு தேவன் தம் உன்னத பெலனைக் கொடுத்திருக்கிறார். இப்போது அவன் பூரண சுகத்தோடு இருக்கிறான். மகனுக்காக ஜெபித்த உங்களுக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். ரூஹா பத்திரிக்கையில் சாட்சி எழுதுவதாக பொருத்தனை பண்ணி ஜெபித்தேன். என் பொருத்தனையை அங்கிகரித்து பூரண சுகம் கொடுத்த தேவனுக்கு நன்றிகளை செலுத்துகிறேன்.











- J. ஜெஸிந்தா ஜுவானி, திருப்பூர்






## வேலை கிடைத்த அற்புதம்

என் பெயர் சலோமி. நாங்கள் பெங்களூரில் வசித்து வருகிறோம். **Electrical Engineering** படித்துள்ளேன். நான் வேலை வேண்டி பல இடங்களில் விண்ணப்பித்து இருந்தேன். நேர்முகத்தேர்வுகளிலும் பங்குபெற்றேன். ஆனால், விண்ணப்பித்த எல்லா இடங்களிலும் வேலை இல்லை என்ற பதிலே எனக்கு கிடைத்தது. இதனால் நான் அடைந்த மனவேதனைக்கு அளவே இல்லை. எனக்கு ஒரு நல்ல எதிர்காலம் இருக்காதா என்று கண்ணீர் வடித்தேன். அந்த வேளையில் தான் ரூஹா ஊழியத்தைக் குறித்து ஏற்கனவே அறிந்திருந்த நான், தொலைபேசியில் 24 மணிநேர ஜெபசேவைக்குத் தொடர்பு கொண்டேன். அங்கிருந்த ஜெபவீரர் எனக்காக மிகவும் ஊக்கமாய் ஜெபித்தது மட்டுமின்றி, விரைவில் வேலைக்கான **Order** என்னை வந்து சேரும் என்று விசுவாசத்துடன் கூறி பெலப்படுத்தினார்கள். எனக்காக ரூஹா ஊழியத்தில் ஜெபம் ஏறெடுக்கப்பட்ட இரண்டு நாட்களுக்குப் பிறகு, நான் ஏற்கனவே விண்ணப்பத்திருந்த இடத்தில் இருந்து அழைப்பு வந்தது. விசுவாசத்துடன் சென்ற எனக்கு ஆச்சரியம் காத்திருந்தது. காரணம், எனக்கு வேலை இல்லை என்று சொல்லி அனுப்பிய அதே கம்பெனியிலேயே வேலைக்கான ஆர்டரை என் கரங்களில் கிடைக்கப்பெற்றேன். அந்த நேரத்தில் நான் அடைந்த சந்தோஷத்திற்கு அளவே இல்லை என்று சொல்லலாம். அதுமட்டுமின்றி, வேறொரு இடத்திலும் அதிக வருமானத்தில் வேலைக் கிடைத்தது. இப்போது நான் எந்த வேலையைத் தெரிந்தெடுப்பது என்ற இரட்டிப்பான மகிழ்ச்சியில் உள்ளேன். வேலை இல்லாமல் திண்டாடின எனக்கு தேவன் செய்த அற்புதம் மிகப் பெரியது. எல்லா துதி கனம் மகிமை இயேசுவுக்கே செலுத்துகிறேன்.








- சலோமி, பெங்களூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# NESSA நெசா
## CHARITABLE TRUST தொண்டு நிறுவனம்

நெசா தொண்டு நிறுவனம் சென்னையிலும் அதைச் சுற்றியுள்ள இடங்களிலும் வறுமைக்கோட்டுக்கு கீழே வாழும் நலிந்த மக்களைத் தேடிச் சென்று உதவிகளை செய்துவருகிறது. பல்வேறு வழிகளில் அவர்களின் குறைவுகளை நிறைவு செய்துவரும் நெசா தொண்டு நிறுவனத்துடன் இணைந்து செயல்பட பல பிரபலமான நிறுவனங்கள் முன்வந்துள்ளன.

### ஒரு பிரபல தொலைபேசி நிறுவனத்துடன் நெசா :

நெசாவுடன் ஒரு தொலைபேசி நிறுவனம் இணைந்து ஏழை எளிய மக்களுக்கு இலவச உணவு வழங்குவது என்று முடிவு செய்து 24.08.2011 அன்று சென்னையின் பல இடங்களுக்கு வேனில் சென்று அங்கு வசிக்கும் வறுமைக் கோட்டுக்கு கீழே வாழும் மக்களுக்கு இலவச உணவுகள் வழங்கப்பட்டது. இதன் மூலம் 300 குடும்பங்கள் போஷிக்கப்பட்டன.



### நெசாவும் இராமச்சந்திரா மருத்துவமனையும் நடத்திய இலவச பல்மருத்துவ சிகிச்சை முகாம் :

14.09.2011 அன்று நலிந்த மக்களுக்கென்று பல்சிகிச்சைமுகாம் ஒன்றை சென்னையில் உள்ள நெசா தொண்டு நிறுவனமும் இராமச்சந்திரா மருத்துவ மனையும் சேர்ந்து நடத்தியது. இந்த முகாமுக்கு சுமார் 50 குடும்பங்கள் சிகிச்சை பெறுவதற்காக வந்திருந்தனர். மருத்துவர்கள் இரண்டு குழுக்களாக பிரிந்து ஒரு குழுவினர் பரிசோதனையும் மற்றொரு குழுவினர் மருத்துவர்களால் பரிந்துரைக்கப்பட்ட சிகிச்சையையும் செய்தனர். இத்தனையும் இலவசமாய் செய்ய முடிவதற்கு மிகவும் உறுதுணையாக இருப்பது நெசா உறுப்பினர்கள்தான்.

இன்று முதல் நெசா தொண்டு நிறுவனத்தின் மூலமாய் உங்கள் ஈகையின் பலனை நலிந்த மக்கள் பெற்று நலம் பெற வேண்டும் என்று நீங்கள் விரும்புவீர்களானால் நெசா தொண்டு நிறுவனத்துடன் இணைந்து செயல்படுங்கள். நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து செயல்படுவோம். நலிந்தவர் வாழ்வில் நன்மைச் சேர்ப்போம். ஆதரவற்ற மக்களின் அன்றாட தேவைகள் தடையின்றி கிடைத்திட, உதாரத்துவமான எண்ணம் கொண்ட பலரின் உதவிக்கரங்கள் ஒன்றாக செயல்பட்டால் தான் ஒதுங்கி வாழ்கின்ற, உள்ளம் உடைந்த ஏழை எளிய மக்களின் தேவைகள் பூர்த்தியடைய முடியும்.

மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் (மத்தேயு 25:40)

NESSA CHARITABLE TRUST : 20/28, Dr. Ambedkar Main Road, Kodambakkam, Chennai - 24, Tamilnadu, South India. Ph : 044 - 2375 0777 E-mail : contact@nessacharity.org
Visit our website : www.nessacharity.org (for online donation)

Cheque / DD in favour of NESSA CHARITABLE TRUST, Payable at Chennai A/c No.630104000022473 IDBI Bank, Ashok Nagar Branch

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# FREE

## சிறப்பு தெ

### கல்முனை :

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் இலங்கை தேசத்திலுள்ள கல்முனையில் ப்ரீடம் பெருவிழா சிறப்பாக நடைபெற்றது. A.O.G சபையின் போதகர் கோமஸ் அவர்கள் கூட்டத்தை மிகவும் நேர்த்தியாக ஒழுங்கு செய்திருந்தார்கள். போதகருடன் இணைந்து சபையின் மூப்பர்கள் வாலிபர்கள் சிறுவர்கள் மற்றும் சபை மக்கள் அனைவரும் இணைந்து அனைத்து ஏற்பாடுகளையும் பொறுப்பேற்று சிறப்பாக ஒழுங்கு செய்திருந்தனர். கல்முனை பகுதி சுனாமியினால் முற்றிலும் அழிக்கப்பட்ட ஒரு இடமாகும். இங்கு வாழும் ஜனங்கள் அநேகர் தங்கள் சொந்தங்களை உடமைகளையும் சுனாமிக்கு பறிகொடுத்தனர். எதிர்கால பயத்தோடும், கண்ணீரோடும், கலக்கத்தோடும் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களுக்கு இறைவனின் பாதுகாப்பையும் அன்பையும் ஆசீர்வாதத்தையும் வெளிப்படும் வண்ணமாக ப்ரீடம் பெருவிழா நடைபெற்றது. ஜனங்கள் இக்கூட்டங்களில் பங்குபெற பலவித தடைகளும் பயங்களும் காணப்பட்டாலும் அதையும் பொருட்படுத்தாமல் ஜனங்கள் திரள்திரளாய் வந்து கூட்டங்களில் பங்குபெற்றனர். விசேஷமாக ஏராளமான கிறிஸ்துவை அறியாத பிறமதத்தினரும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு இறைவனின் ஆசீர்வாதத்தை பெற்றுச்சென்றனர். இயேசு கிறிஸ்துவின் அன்பை பாடல்கள் மூலமாகவும் தேவசெய்தியின் மூலமாகவும் சகோதரர் அவர்கள் எடுத்துரைத்தபோது வந்திருந்த ஜனங்கள் ஆத்தும இரட்சிப்பபையும் விடுதலையையும் சமாதானத்தையும் சுகத்தையும் பெற்றுக்கொண்டனர். பிசாசின் பிடியிலிருந்த பலர் அந்நாட்களில் விடுதலையாக்கப் பட்டார்கள். பரிசுத்த ஆவியின் அபிஷேகம் வல்லமையாய் ஊற்றப்பட்டது. ஆவியானவர் தரும் தெய்வீக ஆறுதலையும் மனசமாதானத்தையும் எதிர்காலத்தை குறித்த நம்பிக்கையும் ஜனங்கள் பெற்று மகிழ்ந்தவர்களாய் தங்கள் வீடுகளுக்கு திரும்பினர். மூன்றாவது நாள் கூட்டத்தின் போது பல சிறுவர்கள் மேடைக்கு ஓடி வந்து தங்களுக்கும் பரிசுத்த ஆவியின் நிறைவு வேண்டும் என்று கதறி அழுத காட்சி போதகரை மட்டுமல்லாது, கூடி இருந்த அத்தனைப்பேரின் உள்ளங்களையும் உடைத்து நெகிழ வைத்தது. தேவநாமம் கல்முனையில் மகிமைப்பட்டது.

### யாழ்ப்பாணம் :

ஏஞ்சல் சர்வதேசபள்ளியின் நிறுவனரான பாஸ்டர் சாம் ராஜ சூர்யா அவர்கள் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கூட்டங்களை விசேஷித்த விதத்தில் ஒழுங்கு செய்திருந்தார்கள். பலவித இடர்பாடுகளினால் மிகவும் பாதிக்கப்பட்ட மக்கள் வாழும் இந்த பிரதேசத்தில் இரண்டு நாட்கள் ப்ரீடம் பெருவிழா மகிமையாய் நடைபெற்றது. இரண்டு நாள் கூட்டங்களிலும் இருக்கைகளே போதாத அளவுக்கு திரளான ஜனங்கள் வந்து கலந்துகொண்டனர். திரள் ஜனங்களைக் கண்டு மனதுருகிய தேவன் தம் பிள்ளைகளுக்காக பரிதபித்து, அவர்களுக்கு அற்புதத்தை செய்து தமது நாமத்தை மகிமைப்படுத்தினார். விசேஷமாய் குடும்பங்களின் மேலிருந்த சாபக்கட்டுகள் தெறிப்பட்டன. அக்கினி அபிஷேகம் வந்திருந்த ஜனங்களுக்குள் வல்லமையாய் இறங்கியது. இப்பெருவிழாவில் கலந்து கொண்ட மக்கள் இயேசுவின் அற்புதமான செயல்களை அனுபவித்து மகிழ்ந்தனர். சகோ. ஆல்வின் தாமஸ் அவர்கள் கர்த்தருடைய வார்த்தைகளை வல்லமையோடு எடுத்துரைத்து, வந்திருந்த மக்களுக்காக உள்ளமுருகி ஜெபத்தை ஏறெடுத்தார்கள். ஒவ்வொரு நாளும் செய்தியின் வேளைகளில் ஜனங்கள்




2011 – செப்டம்பர் 2,3,4ல் இலங்கை தேசம் – கொழும்பு பட்டணத்தில் நடைப்பெற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# DOM 11
ா கு ப் பு

## இலங்கை



மனஆறுதலையும் விடுதலையும் பெற்று ஆனந்த பரவசமடைந்தனர். தேவன் தம்முடைய அற்புதமான வல்லமையை இரண்டு நாள் பகலில் கருத்தரங்கும், இரவில் ஆராதனை பெருவிழாவிலும் வெளிப்படுத்தினார். பிசாசுகள் அலறி ஓடினதைக் கண்டு அநேகர் விசுவாசத்திற்குள் வழிநடத்தப்பட்டனர். வியாதியோடு வந்த ஜனங்கள் அற்புத சுகத்தை ஜெபவேளையில் பெற்றுக்கொண்டனர். பலவித பயத்தினால் பிடிக்கப் பட்டிருந்த ஜனங்கள் இறைவன் இயேசுவினால் விடுவிக்கப்பட்டு பெலத்தோடு திரும்பிச் சென்றனர். மேலும் சிறுபிள்ளைகள் வாலிபர்களை தேவன் தம் வல்லமையின் ஆவியினால் அபிஷேகித்தார். கூட்டங்களில் பங்குபெற்ற வாலிபர்களில் பலர் தங்களை முழுநேர ஊழியத்திற்கென ஒப்புக்கொடுத்தனர். இதைக்கண்ட மக்கள் அனைவரும் வியந்து தேவாதி தேவனுக்கு நன்றி செலுத்தினர். யாழ்ப்பாணம் முழுவதும் தேவவல்லமை வெளிப்பட்டது. ஜனங்கள் ஆனந்த பரவசமடைந்தனர். ஆராதனை கருத்தரங்கு வேளைகளில் ஆராதனையின் மேன்மையை ஜனங்கள் அறிந்து பரவசம் அடைந்தார்கள்.

### கொழும்பு :

FREEDOM 11 துதி ஆராதனை கொழும்புவில் ரூஹா ஊழியத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டது. இக்கூட்டத்தினை டாக்டர் ரோனி அவர்களும், கருத்தரங்கு வேளையிலும் ஆராதனை வேளையிலும் ரூஹா குழுவினரோடு இணைந்து தன்னார்வ தொண்டர்களாய் பணியாற்றவும் ஜெப வீரர்களாக செயல்படவும் பாடகர் குழுவில் இணைந்து பாடவும் விருப்பம் தெரிவித்து கொழும்பு மக்கள் பலரும் ஆர்வத்துடன் முன்வந்தனர். இக்கூட்டத்தில் கொழும்புவைச் சேர்ந்த எல்லா சபைபோதகர்களும் கலந்து கொண்டு கூட்டத்தை சிறப்பித்தது கூடுதல் மகிழ்ச்சியானது. மூன்று நாள் கூட்டங்களிலும் தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மூன்று மொழிகளில் சகோதரர் ஆல்வின் தாமஸ் அவர்கள் பாடல்களை பாடி தேவனை மகிமைப்படுத்தியது இக்கூட்டத்தின் சிறப்பம்சமாகும். சகோதரர் அவர்களை தேவன் வல்லமையாய் பயன்படுத்தினார். கூட்டத்திற்கு வந்திருந்த அனைவருமே அபிஷேகத்தின் நிறைவினால் தங்கள் வாழ்வில் சந்தித்து வரும் போராட்டங்களிலிருந்து ஒரு விடுதலையை பெற்றுக் கொண்டனர். அநேகர் தீராத வியாதிகளிலிருந்து சுகத்தையும் பிசாசின் கட்டுகளிலிருந்து விடுதலையையும் ஆத்தும இரட்சிப்பையும் தெய்வீக சமாதானத்தையும் பெற்றுக்கொண்டனர். கடைசி நாள் கூட்டத்தில் சகோதரர் அவர்கள் மூத்த ஊழியர்களை மேடைக்கு அழைத்து அவர்களிடம் இலங்கை தேசிய கொடியைக் கொடுத்து அதை உயர்த்திப் பிடிக்கச் செய்து, இலங்கையின் சமாதானத்திற்காகவும், ஆசீர்வாதத்திற்காகவும் விசேஷித்த பிரார்த்தனையை ஏறெடுத்தார்கள். இலங்கை தேசத்தில் தேவன் சமாதானத்தை உண்டு பண்ணும்படி சகோதரர் அவர்கள் எக்காளத்தை முழங்கப் பண்ணினார். இறுதியில் இலங்கை தேசிய கீதம் முழங்க அத்தேசத்திற்கு மரியாதை செலுத்தப்பட்டது. இறுதி ஜெபவேளையில் ஆண்டவரின் பிரசன்னம் அபரிவிதமாய் இறங்கி கூட்டம் இனிதே முடிவடைந்தது. கர்த்தருக்கே மகிமையுண்டாவதாக!





ப்ரீடம் பெருவிழாவில் அலைக்கடலென திரண்டிருந்த மக்கள் வெள்ளத்தின் ஒரு பகுதி...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் இயேசுவின் இரக்கங்கள்

## தேவ வல்லமை இறங்கியது சுகம் பெற்றேன்





ஜெபவேளையின் போது... அற்புதம்

கொழும்புவில் மூன்றாவது நாள் கூட்டம் நடைபெற்றபோது பல்லாயிரக்கணக்கான மக்கள் தேவச்செய்தியை கேட்க ஆவலாய் வந்து கூடியிருந்தனர். சகோ. ஆல்வின் தாமஸ் அவர்கள் பரிசுத்த ஆவியின் நிறைவோடு தேவசெய்தியின் இறுதியில் ஜெபிக்க ஆரம்பித்தார். அப்போது உள்ளத்தால் உடைக்கப்பட்ட ஏராளமான மக்கள் தங்களுக்கும் ஒரு அற்புதம் கிடைக்காதா? என்ற எதிர்ப்பார்ப்போடு மேடைக்கு அருகே ஓடோடி வந்தனர். அப்படி வந்த ஜனக்கூட்டத்தின் நடுவே ஒரு இளம்பெண் நின்று கொண்டிருந்தாள். அவளுக்கு என்ன நடந்தது என்று கேட்டபோது தன் கைகளைப் பார்த்து கண்ணீர்விட்டு அழ ஆரம்பித்தாள். மந்திரக் கட்டினால் அவளது கை மிகவும் வளைந்துபோய் அவளுக்கு மிகுந்த வேதனையை தந்து கொண்டிருந்தது. இதற்காக அந்த பெண் செய்யாத முயற்சிகள் இல்லை. ஆனால் அத்தனையும் தோல்வியில் முடிந்ததாக தெரிந்தது. இறுதியாக ப்ரீடம் 11 நடப்பதைக் கேள்விப்பட்டு கூட்டத்தில் வந்து கலந்து கொண்டார். அப்பொழுது பரிசுத்த ஆவியினால் நிரம்பி வல்லமையினால் ஜெபித்துக் கொண்டிருந்த சகோதரர் அவர்கள் அந்த இளம்பெண்ணுக்கு தீர்க்கதரிசனம் உரைத்தார். சகோதரியே அன்று தேவாலயத்தில் இயேசுவானவர் சூம்பின கையுடைய மனுஷனுக்கு சுகத்தைக் கொடுத்ததுபோலவே இன்று அவருடைய வல்லமையினால் உனக்கும் சுகம் கொடுக்கப்போகிறார். இப்பொழுது செயலற்று இருக்கும் உன் கரங்களை நீட்டு என்றார். ஆண்டவர் கொடுக்கும் அற்புத சுகத்தை பெற்றுக் கொள் என்றார். அந்த வார்த்தைகளைக் கேட்ட அந்தப்பெண் விசுவாசத்துடன் தன் கைகளை மேல்நோக்கி உயர்த்தினாள். என்ன ஆச்சரியம் அவள் கைகளை கட்டி வைத்திருந்த மந்திரக்கட்டுகள் அந்த நொடிப்பொழுதே கர்த்தரின் வல்லமையால் தெறிப்பட்டது. அவளது கைகளில் அற்புதமான சுகம் உண்டானது. எல்லா ஜனங்களும் பார்க்கும் வண்ணமாக தன் கைகளை மேல்நோக்கி உயர்த்தினாள். பரிபூரண சுகத்தை பெற்றுக்கொண்ட அந்த பெண் தன் கைகளை உயர்த்தி தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்தி நன்றி கூறினாள்.

## பிசாசின் கட்டிவிருந்து விடுதலை

என் பெயர் சங்கீதா. நான் கடந்த ஒரு வருடமாக பிசாசின் பிடியினால் பாதிக்கப்பட்டு மிகுந்த வயிற்றுவலியினால் அவதிப்பட்டேன். இதிலிருந்து எனக்கு விடுதலையே கிடைக்காமல் மிகவும் துக்கத்துடன் வாழ்ந்து வந்தேன். அடிக்கடி என்னுடைய வயிறு ஊதிப்போய் பயங்கரமாக வலிக்க ஆரம்பிக்கும். நன்றாக சாப்பிட வேண்டும் என்று ஆசையாக இருக்கும் ஆனால் சாப்பிட முடியாது. காரணம் அதிகமாக சாப்பிட்டுவிட்டால் உடனே அந்த வயிற்றுவலி என்னை பாடாய் படுத்திவிடும். என்னால் வேதத்தையும் வாசிக்க முடியால், ஜெபிக்கவும் முடியாமல் கஷ்டப்பட்டேன். ஒவ்வொரு நாளும் ஏற்படும் வலியை என்னால் தாங்கவே முடியாது. தினம்தினம் இந்த வயிற்று வலியின் பிடி என்னை மேலும்மேலும் இறுக்கியது. இதற்கு முடிவுதான் என்ன? எந்த நேரத்தில் என் வயிறு வீங்கும் என்று சொல்லவே முடியாது. திடீரென்று வரும்வலி என்னை புரட்டி எடுத்துவிடும். இதற்கு ஒரு வழி கிடைக்காதா? என்று கண்ணீருடன் நான் ஏங்கின நாட்கள் உண்டு. என் ஏக்கத்தை கண்ணுற்ற தேவன் மனமிரங்கி இக்கூட்டம் இங்கு நடைபெற உதவி செய்தார். ஒரு பெரிய எதிர்ப்பார்ப்போடு இக்கூட்டதிற்கு வந்திருந்தேன். சகோதரர் அவர்கள் அளித்த தேவச்செய்தி என் உள்ளத்தை அதிகமாய் தொட்டது. இறுதி ஜெபவேளையின்போது பரிசுத்த ஆவியினால் சகோதரர் அவர்கள் நான் நின்று கொண்டிருந்த இடத்தை சரியாக குறிப்பிட்டு தீர்க்கதரிசனமாய் எனக்காக ஜெபித்தார்கள். சகோதரர் அவர்கள் சொன்னது என்னவென்றால் இதோ இந்த வலதுபக்கத்தில் நான் ஒரு சகோதரியை காண்கிறேன். அவருடைய வயிற்றுப்பகுதியில் அக்கினி விழுந்ததைபோல எரிந்து கொண்டிருப்பதை பார்க்கிறேன். தேவ ஆவியானவர் வயிற்றிலுள்ள பெலவீனத்தை இப்பொழுதே சுகப்படுத்துகிறார் என்று தீர்க்கதரிசனமாக ஜெபித்தார்கள். அந்த நேரத்தில் எனக்குள் ஒரு வல்லமை குளிர்ச்சியாய் இறங்குவதை உணர்ந்தேன். இவ்வளவு நாட்களும் என்னை அலைக்கழித்துக் கொண்டிருந்த அசுத்த ஆவி சகோதரர் ஜெபித்தபோது என்னை விட்டு வெளியேறியதை உணர்ந்தேன். இப்பொழுது நான் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறேன். வயிற்று வலியிலிருந்து பரிபூரண சுகத்தையும் பெற்றுக் கொண்டேன். எனக்காக ஜெபித்து ஆண்டவரிடத்திலிருந்து சுகத்தைப்பெற்றுத் தந்த சகோதரர் ஆல்வின் தாமஸ் அவர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். – சங்கீதா, கல்முனை



மேடையெறி சாட்சி பகிர்ந்த போது....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆச்சரியப்படத்தக்க அற்புதம்

என் பெயர் ரூபி. நான் இலங்கை தேசத்தில் கொழும்புவில் வசித்து வருகிறேன்.நான் **FREEDOM** கூட்டங்களில் பங்குபெற்று விசேஷித்த ஆசீர்வாதத்தை பெற்றுக்கொண்டேன். அதில் ஒரு சாட்சியை பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். கொழும்புவில் நடைபெற்ற கடைசிநாள் கூட்டத்தன்று **FREEDOM TEAM** க்கான சாப்பாடு செலவு முழுவதையும் நான் ஏற்றுக் கொண்டேன். இதற்குண்டான பணம் நான் என்னுடைய சிறிய வருமானத்தைக் கொண்டு சேமித்தது. அப்படி நான் ரூஹா ஊழியத்தினருக்கு என்று ஒரு செலவினை ஏற்றுக்கொண்டதில் மிக மகிழ்ச்சியுடன் வீடு திரும்பிக் கொண்டிருந்தேன். அப்போது எனக்கு ஒரு போன் கால் வந்தது. என்னவென்று கேட்டபோது எனக்கு அறிமுகமானவர்கள் பேசினார்கள். எனக்காக ஒரு தொகையை பேங்கில் போட்டு இருப்பதாகவும் அதை உடனே சென்று எடுத்துக் கொள்ளுமாறும் கூறினார்கள். கர்த்தருடைய ஊழியத்தை தாங்கின எனக்கு நிறைவான பலனை தேவன் அந்நாளிலே கட்டளையிட்டு மகிழ்வித்தார். கர்த்தர் எனக்கு பாராட்டின பெரிதான இரக்கத்தை எண்ணி கண் கலங்கியபடி அவருக்கு நன்றி கூறினேன். ஊழியக்காரர்களுக்கு நாம் ஒன்று செய்தால் அதை நூறத்தனையாக தேவன் நமக்கு திருப்பி கொடுப்பார் என்பதற்கு தேவன் என்னை சாட்சியாக நிறுத்தியுள்ளார். கர்த்தருக்கே ஸ்தோத்திரம்.

- ரூபி, கொழும்பு

### நேரில் கண்டேன் மலைத்து போனேன்



இதுவரையில் இந்த நிகழ்ச்சிகளை சி.டியில் தான் பார்த்திருக்கிறோம். நேரில் இங்கு நடந்த அற்புதங்களையும் ஆடல் பாடல்களையும் பார்த்த போது மிகவும் சந்தோஷமும் சமாதானமும் விடுதலையும் கிடைத்தது. நேற்று நான் என்ன நினைத்து வந்தேனோ அதே காரியத்தை தீர்க்கதரிசனமாக தேவன் சகோதரரின் மூலமாக எனக்குச் சொன்னார். அப்போது உனக்குள்ள எல்லா கவலைகளையும் இயேசுவின் பாதத்தில் வைத்துவிட்டு நீங்கள் மன மகிழ்ச்சியாயிருங்கள் என்று சொன்னார். அவருடைய ஆடலும் பாடலும் எங்களுக்கு மிகவும் மகிழ்ச்சியை தந்தது. ஒரு Handbill எங்கள் சகோதரனுக்கு கிடைத்தது. அதில் கண்டுள்ளபடி இங்கு கூட்டம் நடக்கிறது என்பதை அறிந்து இந்த கல்முனைக்கு பல தடைகளை தாண்டி வந்து கலந்து கொண்டோம். எங்களோடு இரண்டு வாலிபர்களையும் கூட்டி வந்தோம். அவர்களும் இங்கு வந்தால் இரட்சிக்கப்படுவார்கள் என்ற நம்பிக்கையோடு கூட்டி வந்தோம். அவர்கள் ஆடல் பாடல் மூலமாக எடுத்துச் சொல்லும்போது பெரிய எழுப்புதலை உணர்ந்தோம். அதைப் போலவே அந்த இரண்டு இளைஞர்களும் விடுதலையை பூரணமாக உணர்ந்தார்கள்.

### என் கேள்விக்கு பதில் கிடைத்தது



ஆவிக்குரிய பிரகாரமாய் ஆண்டவர் கிரியை செய்ததை என் கண்கள் கண்டது. அவருடைய பிரசன்னத்தை நாங்கள் உணர்ந்தோம். ஆண்டவர் பெரிய தீர்க்க தரிசியை இங்கு அழைத்து வந்திருக்கிறார். கர்த்தர் பெரிய காரியங்களை இந்த தேசத்தில் உண்டுபண்ண போகிறார் என்பதை தீர்க்க தரிசனமாக தம்முடைய தீர்க்க தரிசயைக் கொண்டு சொன்னார். நாங்கள் இந்த கூட்டம் நடப்பதை ரூஹா மாதப்பத்திரிக்கை மற்றும் பேப்பரில் பார்த்து இங்கு வந்திருக்கிறோம். எங்களுக்கு சமாதானத்தையும் விடுதலையும் தந்த கர்த்தருக்கு நன்றி. வாழ்க்கையில் நிறைய கேள்வி களோடு அடுத்து என்ன நடக்குமோ என்ற பயத்தோடு வாழ்ந்து கொண்டிருந்தோம். இன்றைக்கு ஆண்டவர் நம்முடைய சகோதரர் மூலமாக பேசினார். இப்படிப்பட்ட கூட்டங்களை அற்பணிப்போடு நடத்துகிற சகோதரர் அவர்களுடைய ஊழியத்தை ஆண்டவர் ஆசீர்வதிப்பார்.

### இளைஞர்களின் எதிர்காலம்



நான் கிளிநொச்சியிலிருந்து வருகிறேன். வழியில் எத்தனையோ தடைகள் இருப்பினும் எப்படியும் இந்த கூட்டத்திற்குச் செல்ல வேண்டும் என்று எனக்குள் இருந்த வைராக்கியம் அத்தனை தடைகளையும் கடந்து இந்தக் கூட்டத் திற்கு வரச் செய்தது. வந்து கலந்து கொண்டபோது தான் நான் எவ்வளவு பாக்கியம் பெற்றவன் என் பதை உணர்ந்து கொண்டேன். இங்கு நடைபெறும் ஆடல், பாடல்கள், குறுநாடகங்கள் அத்தனையும் ஒரு படிப்பினையை போதிப்பதாக உள்ளது. இங்கு நான் தனியாக தான் வந்தேன். எனக்கிருக்கும் வருத்தம் என்னவென்றால் இவற்றையெல்லாம் காண்பதற்கு என் குடும்பத்தினரும் இங்கிருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும். ஜெபவேளையின்போது நடைபெற்ற அற்புதங்கயையும் அடையாளங்களையும் என் குடும்பத்தினர் கண்டால் மகிழ்வார்கள். அது மட்டுமல்லாமல் இளைஞர்களுக்காக ஏறெடுக்கப்படும் என் பிள்ளைகளுக்கும் போய்ச் சேர்ந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும். நாளைக்கு என் குடும்பத்தினரோடு வந்து கலந்து கொள்வேன். என் பிள்ளைகளும் இதில் கலந்து கொள்ளும் பட்சத்தில் இளைஞர்களுக்காக நடத்தப்படும் அத்தனை நிகழ்ச்சிகளும் என் பிள்ளைகளுக்கும் ஒரு ஆசீர்வாதமாக அமையுமே. அதுமட்டுமல்ல வருங்காலம் சிறப்பாக அமைவதற்கு இளைஞர்களுக்கு என்னென்ன நல்லவைகள் தேவைப் படுமோ அத்தனையும் இவர்கள் நடத்தும் கூட்டத் தின் மூலம் கிடைக் கிறது. ஒவ்வொரு இளைஞர்களும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டிய அற்புதமான கூட்டம் இது.

### என் கேள்விக்கு பதில் கிடைத்தது



நான் வவுனியாவிலிருந்து வருகிறேன். இதுபோன்ற ஆவிக்குரிய வழிநடத்துதலின் கூட்டங்கள் இங்கு வராதா என்று எதிர்ப்பார்த்து காத்திருந்தேன். ஏஞ்சல் டி.வியில் தான் சகோ. ஆல்வின் தாமஸ் அவர்களை கண்டிருக்கிறேன். இந்தக் காலக்கட்டத்தில் இளைஞர்களுக்கு என்ன வழிகளில் சொன்னால் அவர்களுக்கு இலகுவாக புரியும் என்பதை புரிந்துக் கொண்டு அவர்கள் விரும்புகிறபடியே நிகழ்ச்சிகளை தொகுத்து வேதத்தின் பாதைகள் சற்றுக்கூட மாறாமல் சொல்லுகின்ற பாணியை நான் மிகவும் ரசித்தேன். டி.வியில் சகோதரை பார்க் கும்போதேல்லாம் நேரில் காணமாட்டோமா என்று ஏங்குவேன். என் நீண்ட நாள் எதிர்ப்பார்ப்புக்கு தேவன் கருணை புரிந்து சகோதரை இங்கு வரச் செய்தார். இதில் கலந்து கொண்ட பிறகு நான் இதுவரை காத்துக் கிடந்த பரிசுத்த ஆவியின் அபிஷேகம் எனக்கு கிடைத்தது. சகோதரர் அவர்கள் ஆராதிக் கும்போது ஆவிக்குரிய பலன்கள் எனக்கு கிடைத் தது. உண்மையான அனுபவத்திற்குள் நான் என்னுடைய புது பெலனை பெற்றுக்கொண்டேன். இது போன்ற கூட்டங்கள் இங்கு அடிக்கடி நடக்க வேண்டுமென்று நான் ஆண்டவரிடம் ஜெபித்துக் கொள்ளப்போகிறேன்.

### மதில் இடிந்து விழுந்தது



**It is woderful, it is tremendous** இது இலங்கை தேசத்திற்காக தேவன் கொடுத்த தீர்க்கதரிசனம். ஜனவரியில் ஆண்டவர் சொன்னார் அதை இப்போது நிறைவேற்றி இருக்கிறார். நிச்சயமாகவே ப்ரீடம் இலங்கை தேசத்திற்கு விடுதலையை கொண்டுவந்தது. எழும்பி பிரகாசி என்ற வசனத் தின்படியே இலங்கையில் வெளிச்சம் பிரகாசிப்பதை உணர முடிகிறது. **Another thing two day before I had a vision** ஒரு பெரிய மதில் இடிந்து விழுகிறமாதிரி ப்ரீடம் டீம் தடையான மதிலை இடித்து விட்டார்கள். ஆராதனை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


வேளையில் அந்த மதில் உடைக்கப்பட்ட என்பது உண்மை. thank you so much for freedom

## இது ஒரு நல்ல தருணம்



வாலிபர்கள் மத்தியில் ஆண்டவர் ஒரு எழுப்புதலை உண்டாக்குவதற்கு சகோதரர் ஆல்வின் தாமஸ் அவர்களை இலங்கைக்கு அனுப்பியிருக்கிறார் என்று நினைக்கிறேன். அவர் வாலிபர்களுக்காக செய்யும் இந்த ஊழியத்தை நாங்கள் வரவேற்கிறோம். அநேக வாலி பர்கள் தேவனன்டைக்கு வந்து சேருவதற்கு இதுஒரு நல்ல தருணம். கர்த்தர் இவ்விதமாக நிகழ்ச்சிகளை பல நாடுகளுக்கு சென்று நடத்த வேண்டுமென்று விரும்புகிறேன். இதனால் உலகிலுள்ள இளைஞர்கள் கர்த்தரை அறிந்து கொள்ள சந்தர்ப்பம் கிடைப்பதால் சகோதரர் ஆல்வின் தாமஸ் அவர்களை ஆசீர்வதித்து வெளி நாடுகளுக்கும் கொண்டு செல்வாராக.

## தேவன் தந்த பெலன்



சகோதரர் ஆல்வின் தாமஸ் அவர்களுடைய சிடிக்கள் மூலமாக அவருடைய பாடல்களை யும் செய்தியையும் நிறைய கேட்டிருக்கிறோம். இலங்கை தேசத்தில் இப்படி ஒரு கூட்டத்தை துணிவுடன் வந்து அவர் நடத்துகிறார் என்றால் அது தேவன் கொடுத்த பெலன்தான். அவருடைய ஆராதனை கள் அனைத்தும் வித்தியாசமாக இருக்கிறது. நேற்று அநேக வாலிபர்கள் பரிசுத்தப் படுத்தப்பட்டார்கள். தேவனை ஏற்றுக் கொண்டு ஊழியத்திற்காக தங் களை ஒப்புக் கொடுத்தார்கள். ஒரு வித்தியாசமான சூழ்நிலையை இங்கு நான் பார்க்கிறேன். இதற்கெல்லாம் ஒரு பெரிய துணிவு வேண்டும். இளைஞர்களுக்காக நடத்தப் படும் கூட்டம் அல்லவா அது அப்படித்தான் இருக்கும்.

## கடைசி நாட்கள்



கடைசி நாட்களிலேயே ஆண்டவர் சகோதரர் ஆல்வின் தாமஸ் அவர்களின் மூலமாக அநேகரை சந்திக்கிறார். என க்கு ஐந்து பிள்ளைகள் உண்டு. அவர்களும் இந்த கூட்டங்களில் விரும்பி கலந்து கொள்கிறார்கள். இப்போது இளைஞர்களை அனுக வேண்டும் என்றால் வித்தியாசமான முறையில்தான் அணுக வேண்டும். அவர்கள் விருப்பம் போலவே இந்த நிகழ்ச்சி ஆடல் பாடல் செய்திகளுடன் அமைந்திருக்கிறது. கூடாக ஆண்டவரின் வசனத்தையும் இளைஞர்களின் மனதிலே அறிவிக்கிறார்கள். இதுவரையில் இதுபோன்ற கூட்டம் இங்கு நடந்ததில்லை. அநேக இளைஞர்கள் தங்களை ஒப்புக்கொடுத்ததை பார்க்கும் போது இந்த இலங்கை தேசம் மிகவும் பாக்கியம் பெற்றது என்று நான் நினைக்கிறேன்.

## மீண்டும் மீண்டும் ப்ரீடம்



நான் வவுனியாவிலிருந்து 6 மணி நேரம் டிராவல் பண்ணி இக்கூட்டத்தில் பங்கு கொள்ள வேண்டுமென்று ஆவலோடு வந்திருக்கிறேன். இதில் கலந்து கொண்டபோது மிகவும் மகிழ்ச்சியாகவும் ஆன்மாவை சுத்தப்படுத்துவதாகவும் இருந்தது. இதை அமைத்துக் கொடுத்த சகோதரர் ஆல்வின் தாமஸ் அவர்களுக்கு நன்றி. மீண்டும் ப்ரீடம் 12 இங்கேயே நடக்க வேண்டுமென்று நான் ஆண்டவரை வேண்டுகிறேன். இந்த ப்ரீடம் ப்ரோகிராம் பார்த்ததில் இருந்து மிகவும் வாஞ்சையாக இருக்கிறேன். அதைப்போலவே ஆண்டவர் தம்முடைய மனிதர் மூலமாக என்னை அபிஷேகம் செய்தார். அதற்காக மீண்டும் நான் சகோதரர் அவர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

## ரொம்ப ரொம்ப சூப்பர்!



நாங்கள் இப்படி ஒரு கூட்டம் இங்கு நடைபெறும் என்று நாங்கள் எதிர்ப்பார்க்கவே இல்லை. இது ரொம்ப ரொம்ப சூப்பர். இதை எப்படி சொல்வது என்று எனக்கு முடியவில்லை. வாலிபர்களுக்கு அவசியமான கூட்டம் இது. எங்கள் எதிர்காலம் எப்படியெல்லாம் இருக்கவேண்டும் என்று எடுத்துச் சொல்கின்ற கூட்டம். உண்மையாகவே வாலிபர்களுக்கான ஒரு எழுப்புதல் மீட்டிங். இதற்காக நான் அண்ணன் ஆல்வின் தாமஸ் அவர்களுக்கு நன்றி சொல்லுகிறேன். தொடர்ந்து அவர் எங்களை என்கரேஜ் பண்ண வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

## சந்ததி சந்ததியாக.....



இது என் மகள் சர்மிளா. சகோதரர் அவர்கள் ஜெபம் செய்யும்போது ஒரு நாடகம் நடத்தினார்கள். அது என் மகளுக்கும் என் மகன் ஜார்ஜுக்கும் சொன்னதை போல உணர்ந்தேன். இவர்கள் வாழ்க்கையை குறித்து சொன்னதைப் போல அந்த நாடகம் இருந்தது. மிகவும் சந்தோஷமடைந்தோம். இது வாலிபர்களின் மத்தியிலே மகத்தான எழுப்புதலை உண்டாக்குகிற ப்ரோகிராம் என்பதை கண்கூடாக கண்டேன். அடிக்கடி இதுபோன்ற ப்ரோகிராம் நீங்கள் வைக்கவேண்டும் அதற்காகவும் நாங்கள் எங்களால் முடிந்ததைக் கொண்டு தாங்குவோம் என்ற உறுதிக்கூறுவதோடு இதை ஏற்று சிறப்பாக நடத்திய சகோதரர் ஆல்வின் தாமஸ் அவர்களுக்கு நன்றியை தெரிவிக்கிறேன்.

## அபிஷேகத்தின் சந்தோஷம்



இங்கு வந்தபிறகு எனக்கு கடவுளைப்பற்றி நிறைய தெரிந்தது. எல்லோரும் அபிஷேகம் பெற்றபோது மிகவும் சந்தோஷமாக இருந்தது. எனக்கு அருகில் இருந்தவர்கள் அன்னிய பாஷையில் பேசிய போது மிகவும் உற்சாகமாக உணர்ந்தேன். அதிலும் இந்த இலங்கையில் இப்படி ஒரு பெரிய கூட்டத்தை நான் பார்ப்பது இது தான் முதல் தடவை. இப்போது இளைஞர்கள் ஆலயத்திற்கு வருவது மிகவும் குறைவாக இருக்கிறது. இதுபோன்ற கூட்டங்களின் மூலமாக இளைஞர்கள் தொடப்படும்போது தேவனுடைய ஆலயங்கள் நிரம்பி வழியும் என்னோடு வந்திருந்த அத்தனை இளைஞர்களும் அபிஷேகத்தைபெற்றுக் கொண்டு அவர்களை மறந்து ஆடியதை பார்க்கும் போது மிகவும் சந்தோஷம். சகோதரர் அவர்கள் அடிக்கடி இங்கு வந்து இதுபோன்ற கூட்டங்களை நடத்தவேண்டும்.

## பல நாள் ஜெபத்திற்கு ஜெயம்

எனக்கு தெரியும் இந்த ப்ரீடம் நிச்சயமாக இலங்கையில் பெரிய எழுப்புதலை எற்படுத்தும் என்று நான் பலநாள் ஜெபித்த ஜெபத்திற்கு ஆண்டவர் பதில் கொடுத்து ப்ரீடமை இங்கு நடத்தியிருக்கிறார். ப்ரீடம் 2010 கூட்டத்திற்கும் வந்திருந்தேன். அங்குதான் நான் அபிஷேகம் பெற்று இலட்சக்கணக்கான இளைஞர்கள் துள்ளிகுதிப்பதைக் கண்டேன். என் வாஞ்சையும் அதுதான். என் வாஞ்சையின் படியே ஆண்டவர் என்னையும் நிரப்பினார். இன்று இரண்டத்தனை அபிஷேகம் பெற்று சந்தோஷமாக செல்கிறேன்.

RUAH FM
Refreshing Fulla.....
எழுப்புதலின் சுவாசம்
உங்கள் ruah fmல்....
www.ruahfm.com
www.ruahfm.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PRAY FOR THE PEACE OF JERUSALEM – PS. 122: 6



# UNIVERSITY OF JERUSALEM

Regd. No. 725 / 2004

*University of Jerusalem has been accredited as a centre of Excellence in the field of Theological Education in Five Continents.*

EXTERNAL EDUCATION (CORRESPONDENCE) (REGD. EDUCATIONAL AND CHARITABLE TRUST)

Rev. Dr. Prof. V. Albert Jayasingh
MA., MBA., LL.D., Ph.D., D.C.L.
**Founder / President**



**Courses Offered:** C.Th., D.Th., B.Th., B.D., B.Min., M.Th., M.Div., M.Min., D.Min., D.D., Th.D., S.T.D., Ph.D., in Biblical Studies / Christian Leadership / Church Management / Christian Counseling.

**Special Courses Offered:** BBA & MBA in Christian Business Administration M.A in Christian Counseling and PG Diploma in Christian Counseling.

The Following **Honorary Doctorate Degrees** can be conferred based on Ministry Experience: D.D., D.Min., DCL., D.Litt., LL.D., D.Hum., D.Ltts., D.Miss., D.Music., etc.





You can serve in your free time as Promotional Coordinator of UJ and receive Contribution. To receive the Application Form and Brochure free of cost, send us by post/Email/sms your full Postal Address mentioning the Language of your Choice (English / Tamil).

**Our Address: PO Box No - 26, No.237, GST Road, Kadaperi, West Tambaram, Chennai, Tamil Nadu - 600 045, INDIA.**
**Ph : +91- 44 – 2238 3974, 3242 6288. Fax +91 - 44 - 4204 0107 Cell : 0 - 93807 57175.**
**E-mail : ujglobal@gmail.com Visit us at: www.ujglobal.org**

**www.facebook.com/ujglobal**




# Our New Release

பாதை எதுவென்று தெரியாமல் வீழ்ந்து கிடக்கிறீர்களா ? சோதனைகள் உங்கள் தோள்களில் பயணம் செய்கிறதா ? வீழ்ந்து விடுவோமோ என்கிற எண்ணங்கள் உங்களை தள்ளிவிடப் பார்க்கிறதா? இருளின் கரங்களிலிருந்து உங்களை விடுதலையாக்கி, வெளிச்சத்தில் உங்களை எழும்பி பிரகாசிக்க தேவனின் வார்த்தைகள் உங்களுக்கு படிகளாய் பாதை வகித்து தயாராக இருக்கிறது. பிறகு என்ன நீங்கள் எழும்பி பிரகாசிக்க ஆயத்தமா ?

உங்களை எழுப்பிட தேவனின் வார்த்தைகள் சகோதரர் ஆல்வின் தாமஸ் அவர்களின் செய்தியாக வடிவம் பெற்று தயாராக உள்ளது. வாங்கி ஆசீர்வாதம் பெறுங்கள் !

## Grab your CDs & DVDs at :


**RU-AH MEDIA INC.,**

No:20/28, Ambedkar Road, Kodambakkam, Chennai-24.
Ph: 044 2372 5799 email : ruahmarketing @gmail.com, orders@ruah.in
Visit our website www.ruahministries.org for online purchase
Type DVD / VCD and SMS with your Name to 98849 02777


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Benny's உன்னால் முடியும் டூபே






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உன்னால் முடியும் டூபே

- Illustrations : James




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிங்கியிடம் கேளுங்கள்

Pinky's TEEN TALK



நிருபர்

Hello Pinky போன மாதம் நாங்க செல்போனைப் பற்றி கேட்டிருந்த கேள்விக்கு நீங்க மிகவும் அருமையாகவும், நேர்த்தியாகவும் பதில் சொல்லியிருந்தீங்க. இந்த மாதத்திற்காக ஒரு கேள்வியோடு வந்திருக்கிறோம்.

Pinky

எது இருந்தாலும் கேளுங்க. கர்த்தரிடத்துல ஜெபம் செஞ்சிட்டு பதிலை சொல்றேன். ஆமா அடுத்த கேள்வி என்ன?

நிருபர்

பெற்றோர்களுக்கு கீழ்ப்படிவதால் ஏற்படும் நன்மைகள் என்ன? என்று வேலூரில் இருந்து சிறுமி ரேகா கேட்கிற கேள்விக்கு உங்கள் பதில் என்ன?

Pinky

உங்களோட கேள்வியிலேயே பதில் இருக்குதே - ஏற்படும் நன்மைகள் என்னனு கேட்டதுல இருந்தே கீழ்ப்படிகிறதுல தீமை எதுவுமே இல்லைனுதானே அர்த்தம். உள்ளத்தாலேயும் உடலாலும் நம்மை தாங்கி கொள்றவங்க நம் Parents தானே. கர்த்தர் நமக்காக கொடுத்த கற்பனைக் கூட பெற்றோரை கனம் பண்ணணும்னு தான் சொல்லுது.



பிள்ளைகளே, உங்கள் பெற்றோருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள், இது நியாயம். உனக்கு நன்மையுண்டாயிருப்பதற்கும், பூமியிலே உன் வாழ்நாள் நீடித்திருப்பதற்கும் உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக என்பதே வாக்குத்தத்தமுள்ள முதலாம் கற்பனையாயிருக்கிறது. (எபே 6:1-3)

வேதத்துல நாம் பார்க்கிறது என்னனா ஆபிரகாமை நோக்கி தேவன் உன் குமாரனை எனக்கு தகனபலியாக கொடு என்று கேட்கிறார்.

நான் உனக்கு குறிக்கும் மலைகள் ஒன்றின் மேல் அவனைத் தகனபலியாகப் பலியிடு என்றார் (ஆதி 22:2)

விசுவாசத்தின் தந்தை என்று அழைக்கப்பட்ட ஆபிரகாம் தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து தன் மகன் ஈசாக்கை அழைத்துக் கொண்டு பலிபீடம் நோக்கி புறப்படுகிறார். போகும் வழியில் ஈசாக்கு தன் தந்தையை நோக்கி பலி ஆடு எங்கே என்று கேட்டபோது அதை தேவன் பார்த்துக்கொள்வார் எனறு ஆபிரகாம் பதில் சொல்லுகிறார். அந்த நேரத்தில் ஆபிரகாம் பலியே நீ தான் என்று சொல்லியிருந்தால் கூட ஈசாக்கு அதை ஆமோதித்திருப்பான். காரணம் ஈசாக்கு தன் பெற்றோருக்கு கீழ்ப்படிந்ததால் தேவன் அவனுக்கு சிறந்த ஆசீர்வாதத்தைக் கொடுத்தார். பஞ்ச காலத்தில் அவன் விதை விதைத்த போது அதை நூறு மடங்கு ஆசீர்வாதமாக மாற்றித் தந்தார்.

ஈசாக்கு அந்த தேசத்தில் விதைவிதைத்தான்; கர்த்தர் அவனை ஆசீர்வதித்ததினால் அந்த வருஷத்தில் நூறு மடங்கு பலன் அடைந்தான். (ஆதி 26:12)

கீழ்ப்படிவதால் கிடைக்கின்ற பலனைப் பார்த்தீங்களா! நமக்கு எந்த நேரத்தில் பசி எடுக்கும், எப்போது உறக்கம் வரும் என்பதை நம்மை விட நம்முடைய பெற்றோர்கள் தான் நன்கு அறிந்திருக்கிறார்கள். உடல் நலம் குறைந்து நாம் படுத்துவிட்டால் அந்த பெற்றோர்கள் நமக்காக துடிப்பது அப்பப்பா! டாக்டர் சொன்னதை அப்படியே கேட்டுக் கொண்டு, வேளைத் தவறாமல் கண்விழித்து நமக்கு மருந்து கொடுப்பதும் அவங்க தானே. அப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





படிப்பட்ட தியாக மனம் கொண்ட பெற்றோருக்கு நாம் கீழ்ப்படிதலோட நடந்துகிட்டா நமக்கு தேவன் நன்மையானதைத் தான் கொடுப்பார்.

எப்பொழுதெல்லாம் நாம் தேர்வுக்காக கண் விழித்து படிக்கிறோமோ அப்பொழுதெல்லாம் நம்மோடு விழித்திருந்து வேளை தவறாது நமக்கு வேண்டியவைகளை செய்து உதவி புரிபவர்களும் நமது பெற்றோர்கள் தான். அவர்களது தியாகத்திற்கு முன்னால் நாம் கீழ்ப்படிந்து நடப்பது நமக்கு தேர்வில் கூட வெற்றியைத் தேடித்தரும்.

இந்த உலகத்தைப் படைத்த தேவாதி தேவன் மனுஷ உரு கொண்டு இங்க வந்தபோது என்ன செஞ்சாரு? தன்னுடைய தந்தையோட தச்சுத் தொழிலுக்கு உதவியாயிருந்தாரு. இது அவர் தன் பெற்றோருக்குகீழ்ப்படிந்ததைஎடுத்துக்காட்டுகிறது.

அதுமட்டுமா.......

வேதத்துல இன்னொன்றும் இருக்கிறது. கெட்ட குமாரன் தன்னோட அப்பாவுடைய அன்பை புரிஞ்சிக்காம சொத்தை பிரித்துக் கொடுக்கும்படி அடம்பிடிக்கிறான். செல்வந்தரான அவனுடைய தந்தை எவ்வளவோ எடுத்துச் சொல்கிறார். அதையெல்லாம் காதில் வாங்கிக் கொள்ளாதவன் சொத்தை பிரித்துக் கொடுக்கும்படி கேட்கிறான். வேறு வழி தெரியாத அந்த தந்தை சொத்தை பிரித்து அவனுக்குக் கொடுக்கிறான்.




சொத்து கைக்கு வந்தததும் சந்தோஷமாக அதைப் பெற்றுக் கொள்ளும் கெட்டக்குமாரன் தன் மனம் போன போக்கில அதை செலவழிக்கிறான். அமர்ந்து சாப்பிட்டால் குன்று கூட தரைமட்டமாகும் என்ற பழமொழியைப் போல கெட்ட வழிகளில் அவனது செல்வம் நாளுக்கு நாள் செலவழிஞ்சி கடைசியில அவன் ஒன்னுமில்லாதவனாக நிற்கிறான். பல இடங்களில் அலைந்து கடைசியாக அவனுக்கு பன்றி மேய்க்கும் வேலை கிடைக்கிறது. இறுதியாக, அவனுக்கு பன்றிகள் தின்னும் தவிடு கூட கிடைக்காமல் புலம்புகிறான். தன்னுடைய அப்பா அவனது நினைவுக்கு வர அங் கிருந்து புறப்பட்டு தன் வீட்டுக்கு வருகிறான். "எழுந்து புறப்பட்டு, தன் தகப்பனிடத்தில் வந்தான். அவன் தூரத்தில் வரும்போதே, அவனுடைய தகப்பன் அவனைக்கண்டு, மனதுருகி, ஓடி, அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு, அவனை முத்தஞ்செய்தான்." (லூக்கா 15:20) கெட்ட குமாரனாக தன் இளைய மகன் நடந்து கொண்டாலும் அவனுடைய அப்பா அவனை மன்னித்து ஏற்றுக் கொள்கிறார். என்ன அன்பு பார்த்தீர்களா? இது தான் பெற்றோர்கள் நம் மீது காட்டுகின்ற அன்பு. அதற்கு நாம் என்ன செய்தோம்?

பெற்றோர்களுக்கு நாம் கீழ்ப்படிகின்ற போது தேவன் நமக்கு ஆசீர்வாதங்களை அள்ளிக் கொடுப்பார். அதனால் நாம் எந்த காரியத்தை செய்தாலும் அதில் ஒரு **Victory** -யை காண முடியும். அன்போடு அவர்கள் நமக்கு சொல்லிக் கொடுக்கும் பாதை வழியே தொடர்ந்து சென்றால் வாழ்க்கையின் முடிவு வரைக்கும் வெற்றியோடு வாழலாம். இந்த வயசுல வரும் தூண்டுதல்கள் எல்லாவற்றிலும் இருந்தும் நாம் விடுபடனும் என்றால் பெற்றோர்களின் வார்த்தைக்கு கீழ்ப்படிவது ஒன்றுதான் நல்ல வழி.

**Dear Friends**, இந்த கேள்விக்கான பதில் உங்கள் ஒவ்வொருவருடைய வீட்டிற்குள்ளும் இருக்கிறது. அதற்குண்டான பாதையை நீங்க உங்க **Parents** கிட்டே இருந்தே ஆரம்பிக்கலாம். அந்த ஆரம்பமே உங்கள் **victory**க்கு உங்கள கூட்டிட்டு போகும். நீங்க **future**ல ஒரு **jem**அ போல ஜொலிக்கப் போறிங்க. கர்த்தர் உங்க கீழ்படிதல பார்த்து உங்களுக்கு நிறைய **gift**கள குடுக்கப் போறாரு. கர்த்தருடைய கட்டளைப் படி நடக்கிற உங்கள என்னிக்குமே அவரோட பிள்ளையா தன்னோட மடியில வச்சி உங்களை **honour** பண்ணுவாரு. அவரிடத்தில இருந்து நீங்க **start** பண்ணினா எல்லாமே உங்களுக்கு வெற்றி தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காலங்களில் அவள்

## அன்புள்ள தம்பி,

உன் அன்பின் கடிதம் கண்டேன். நீ ஒரு பெண்ணை காதலிப்பதாகவும் அவளையே கரம்பிடிக்க விரும்புவதாகவும் எழுதியிருந்தாய். அவள் மிகவும் நல்லவள் என்று தொடங்கி காலங்களில் அவள் வசந்தம், கலைகளில் அவள் ஓவியம், மாதங்களில் அவள் மார்கழி, மலர்களிலே அவள் மல்லிகை என்று கவிஞரின் கவிதையை காப்பியடித்து எழுதியிருந்ததையும் கண்டு களி கூர்ந்தேன். மேலும் நீ காதலிப்பது குறித்து ஆலோசனைக் கேட்டிருந்தாய், எனக்கோ கொடுக்கப்பட்ட காலத்தைக் குறித்து எழுதுவது நல்லதென்று கண்டதால் எழுதுகிறேன்.

ஒரு வருடத்தில் நிலவும் எல்லா காலங்களையும் விட மிகவும் சிறப்பான காலம் தான் வசந்தகாலம், அதனால் தான் காலங்களில் அவள் வசந்தம் என்று கவிஞர் வர்ணித்திருக்கிறார். சரி! அப்படி வசந்தகாலத்தில் அப்படி என்னதான் விசேஷம். பூக்களுக்கும் ஆனந்தத்திற்கும் ஓர் இணையற்ற காலம். வசந்தகாலத்தில் மரங்களும் செடிகளும் தளிர்ப்பதைப் பார்க்கும் போது மனதிற்கு மனோரஞ்சிதமாக இருக்கும். இலையுதிர் காலத்தில் இலைகளை உதிர்க்க ஆரம்பித்து, குளிர்காலத்தில் மொட்டையாக நிற்கும் மரங்கள் எல்லாம், வசந்த காலத்தில் துளிர்த்து இலைகளால் நிரம்பி, பச்சைப் பசலேன்று காட்சி அளிக்கும். அதுமட்டுமல்லாமல் எங்கு பார்த்தாலும் பூத்துக் குலுங்கும்.

அதுபோலவே மனிதனும் கருவறை தொடங்கி கல்லறை வரை எத்தனையோ பருவங்களை கடந்து வந்தாலும், இளமைப்பருவம் தான் வாழ்வின் வசந்தகாலமாக, மிகவும் சிறப்பான பருவமாகக் கருதப்படுகிறது. ஏனென்றால் இந்த இளமைப் பருவம் தான், உடலானது எல்லா வலிமையையும் பெற்றிருக்கும் பருவம், பெற்றோர் உழைக்க கவலையன்றி உண்டுறங்கும் பருவம், வாழ்க்கையின் அடித்தளத்தை அமைக்கும் பருவம், உடலானது பூரிப்போடு எதிர்பாலரை ஈர்க்கும் பருவம், நண்பர்கள் அதிகம் கிடைக்கும் பருவம், படிப்பதற்கு ஏற்ற பருவம், பண்பாளனாக உருவாக்கும் உன்னதப் பருவம். இப்படி எத்தனையோ நல்ல பல வித்துக்களை தன்னிடத்தில் பெற்றுள்ள இப்பருவத்தை வாலிபர்கள் வாழ்க்கையை அனுபவிக்கும் பருவமாகக் கருதி, பல்வேறு சிற்றின்பங்களுக்குத் தங்கள் இளமைப் பருவத்தை விற்று விட்டு வாழ்வின் மீதியை நோயிலும், கவலையிலும், கண்ணீரிலும், பயத்திலும், தனிமையிலும் தள்ளி தள்ளாடுகின்றனர்.

இந்த வாலிபப் பருவத்தை தேவனைத் தேடும் பருவம், தேவனை மனதில் நினைத்து துதிக்கும் பருவம் என்று வேதாகமம் சொல்கிறது **நீ உன் வாலிபப் பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை (பிரசங்கி 12:1)** இங்கு தான் மனிதனுடைய சிந்தையும் தேவனுடைய சிந்தையும் வேறுபடுவதைக் காண்கிறோம். மனிதன் இந்தக் காலத்தில் எப்படியாவது உலகத்தை அனுபவித்து விட வேண்டும், இதை விட்டு விட்டால் மீண்டும் இந்தப் பருவம் திரும்ப வராது என்றெண்ணி சிற்றின்பங்களைத் தேடி ஓடுகிறான். இப்படி உலக இன்பங்களையெல்லாம் அனுபவித்து விட்டு நடை தள்ளாடும் வேளையில், பற்களெல்லாம் விழுந்து, தலைமயிரெல்லாம் கொட்டி இனி போய் சேர வேண்டியதுதான் என்ற வேளையில் தேவனைத் தேடினால் போதும் என்று தனக்குத் தானே சொல்லிக் கொள்கிறான். ஆனால் தேவனோ **''இளவயதும் வாலிபமும் மாயை'' (பிரசங்கி:11-10)** என்று சொல்லி, இது தான் பேரின்பமாகிய அவரைத் தேடுவதற்கு ஏற்ற காலம் என்று சொல்கிறார். இந்தக் காலத்தில் அவரைத் தேடி ஓடி வந்தால் உலகத்தில் மீதியான காலத்தை அவர் பொருட்படுத்துக்கொள்வதோடு, மரணத்திற்குப் பின்பும் நித்திய நித்தியமாய் அவரோடு சேர்த்துக் கொள்வார்.

''அட போங்கண்ணே! நம்ம இயேசப்பா, அன்பானவங்க, எப்ப வந்தாலும் மன்னிப்பாங்க, கொஞ்சம் ஆட்டம் பாட்டம் போட்டுகிட்டு, அப்புறமா வந்து மன்னிப்பு கேட்டுட்டா போச்சு! சிலுவையிலே தொங்கின திருடனையே கடைசி நேரத்தில மன்னிச்ச இயேசப்பா, என்னை மன்னிக்கமாட்டாரா?'' இப்படிச் சொல்லும் வாலிபர்களின் கூட்டம் ஏராளம் உண்டு. தம்பி! இயேசு கிறிஸ்து எப்போதும் மன்னிக்கத் தயாராக இருக்கிறார் என்பதற்கு உத்திரவாதம் உண்டு, ஆனால் நாளை உயிரோடு இருப்போமா? என்பதற்கு எந்த உத்திரவாதம் இல்லையே! **சங்கீதம்:31-15 ''என் காலங்கள் உமது கரத்திலிருக்கிறது''** என்றல்லவா சொல்கிறது. பூமி சுழற்சியால் தோன்றி மறையும் ஒரு நாளைப் போலத்தான் மனிதனின் வாழ்க்கைப் பயணமும், பலருக்கு விடியலில் தொடங்கிய பயணம் இரவு வரை நீளும். சிலருக்கு மாலையில் முடிந்து விடும். இன்னும் சிலருக்கு மதியமே முடிந்து விடும். வெகு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சகோ. சா. ரெவரெண்ட் செல்வக்குமார்**

அரிதாக சிலரது பயணம் தொடங்கியதுமே முடிந்து விடும். யாருடைய பயணம் எப்போது முடியும் என்பதை யாரும் அறிய இயலாது. உன்னுடைய வாழ்க்கை இரவு வரை தொடருமா அல்லது மதியத்திலே மறைந்து விடுமா என்பதை முடிவு செய்ய வேண்டியவர் தேவனே. எனவே இன்றே இரட்சண்ய நாள், இன்றே மனந்திரும்ப ஏற்ற நாள், நாளை நாளை என்று நாட்களைத் தள்ளிப் போட்டு விடாதே! மனந்திரும்பு மன்னவன் இயேசுவை நோக்கி!

இராமேஸ்வரத்திற்கு அருகில் தனுஷ்கோடி என்ற நகரத்தைக் குறித்து கேள்விப் பட்டிருப்பாய், அது மீனவர்கள் வசித்த அழகிய கடற்கரை நகரம். ஒவ்வொரு நாள் இரவும், தென்றல் கடலைத் தாலட்டும் போது உண்டாகும் அலைகளின் கீதத்தைக் கேட்டு மீனவர்கள் உறங்கச் செல்வார்கள், அலைகளோடு கொஞ்சி விளையாடிய அழகியத் தென்றல், அலைகளைக் கடந்து மீனவர்களை மோதும் போது உண்டாகும் குளிர் காற்றிலே தங்களை மறந்து தூங்கி விடுவது வழக்கமான ஒன்று. அப்படியே, 1964ம் ஆண்டு டிசம்பர் 23ந் தேதியன்றும் மகிழ்ச்சியோடு உணவு உண்டு, வீட்டின் வெளியிலே அமர்ந்து அரட்டையடித்து, நள்ளிரவில் வீடு திரும்பி உறக்கத்தில் ஆழ்ந்தனர். அதுவரை தென்றல் தாலாட்டின அந்த அலைகளை, புயல் வந்து சீண்டியதால், வெகுண்டெழுந்த அலைகள் காட்டுத்தனமாய் நகரத்துக்குள் புகுந்து கபளீகரம் செய்து விட்டன. விடியலைக் காண்போம் என்ற நம்பிக்கையோட உறங்கச் சென்றவர்கள் விழிக்காமலே, விடியலைக் காணாமலே கடலின் மடியில் முடிவில்லா தூக்கத்தில் ஆழ்ந்து விட்டது கொடுமையிலும் கொடுமையல்லவா? இந்த ஆபத்து நிறைந்த உலகத்திலே, தீவிரவாதிகள் அலைந்து திரியும் இந்த நாட்களிலே, பல கோடி நோய்கள் கொட்டம் அடிக்கும் இந்த வேளையிலே நாளை என்ன நடக்கும் என்ற யாருக்கும் எதுவும் தெரியாது.

எனவே இந்த பூமியில் தேவன் மனிதனுக்கு சரீரத்தைக் கொடுத்திருப்பது இப்பூமியில் இருக்கும் போதே இரட்சிப்பை பெற்றுக் கொண்டு, தேவனோடு உறவாடி, மெய்யான சந்தோஷத்தோடு வாழ்ந்து மரணம் தழுவும் போது சரீரத்தைக் களைந்து போட்டு நித்திய நித்தியமாய் தேவனோடு வாழ்வதற்காகத் தான். மாறாக தன்னுடைய இஷ்டப்படி நடந்து, தன்னுடைய சரீரத்தை தீட்டுப்படுத்துவதற்காக அல்ல என்பதை புரிந்து கொள்ள வேண்டும். இரட்சிப்பிற்கான சந்தர்ப்பம் பூமியில் வாழும் வரைதான் கொடுக்கப்படும். சரீரத்தை விட்டு ஆவியும் ஆத்துமாவும் பிரிந்த பின்பு, இயேசு என் இரட்சகர், எனக்காக இரத்தம் சிந்தினார் என்று அறிக்கையிட்டாலும் அங்கே இரட்சிப்புக்கு வழியே இல்லை. சாது சுந்தர் சிங் ஐயா அவர்கள் ஒரு முறை சொல்லும் போது **"களிமண் ஈரமாயிருக்கும் போதே ஒரு பாத்திரத்தின் உருவத்தை மாற்ற வேண்டுமானால் அதை மாற்றி விட வேண்டும். அதே களிமண் நன்றாய் உலர்ந்து சுடப்பட்ட பின்பு அதன் உருவத்தை மாற்ற முயன்றால் அது உடைந்து விடும். அதுபோலவே மரணத்திற்குப் பிறகு ஒருவனுடைய சுபாவத்தை மாற்ற முடியாது".**

தம்பி! உனக்கு தேவன் கொடுத்திருக்கும் இந்த வாலிப காலம் அருமையான காலம்! எனவே இதை விட்டு விடாதே! தேவனைத் தேட உன் இருதயத்தை ஒருமுகப்படுத்து! வாழ்க்கையில் முன்னேற பிரயாசப்படு! நான் காதலைப் பற்றி ஆலோசனைக் கேட்டால் காலத்தைப் பற்றி எழுதிவிட்டீர்களே என்று எண்ணாதே! நான் எழுதிய காலங்களில் கூட உன் காதலுக்குப் பதிலிருக்கும்.

**அன்புடன் அண்ணன்.**








# வசந்தம்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





இந்தியாவின் எழுப்புதலுக்கு வாலிபருடைய மனந்திரும்புதல் அவசியம். வாலிபர்கள் மனம் திருந்துவதற்கு Freedom அவசியம். பல பட்டணங்களிலும் தேசங்களிலும் Freedom தடையின்றி நடப்பதற்கு உங்கள் பங்களிப்பு மிக அவசியம். யோவேல் 2:28ன்படி, "நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன்; அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள்; உங்கள் மூப்பர் சொப்பனங்களையும், உங்கள் வாலிபர் தரிசனங்களையும் காண்பார்கள்." எனவே பாவத்தில் வாழ்கின்ற வாலிபர்கள் தரிசனம் காண்கின்றவர்களாக மாற, உங்கள் வீட்டு சிறு பிள்ளைகள், வாலிபர்கள் சார்பில் எங்களோடு இணைந்து இவ்வூழியத்தை தாங்குவீர்களா? தேவனை அறியாத வாலிபர்களுக்காக உங்கள் கண்ணீரின் ஜெபத்தையும், தியாகம் நிறைந்த நன்கொடைகளையும் அளிக்க முன்வாருங்கள். Freedom திருச்சி துதி ஆராதனையில் பங்குபெற்று தன் வாழ்வில் உன்னத ஆசீர்வாதங்களை பெற்ற ஒருவரின் சாட்சியை பிரசுரித்திருக்கிறோம்.

அன்புள்ள ஆல்வின் அண்ணணுக்கு

ஷாமினி எழுதுவது, உங்கள் ஊழியத்தின் மூலம் நான் நிறைவாய் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறேன். என் வாழ்க்கையை மாற்றியது திருச்சியில் நடைபெற்ற ப்ரீடம் தான் என்பதை என்னால் உறுதியாய் சொல்ல முடியும். அதற்கு காரணம், நான் கர்த்தரை நம்பினாலும் எனக்குள்ளாக இருந்த பாவபழக்கங்களை எப்படிவிட்டு விலகுவது என்று தெரியாமல் வாழ்ந்து வந்தேன். இந்த நிலையில் ப்ரீடம் பெருவிழாவில் கலந்து கொள்ள தேவன் கிருபை செய்தார். உங்களது பாடல்கள் மற்றும் தேவசெய்தியின் மூலம் கர்த்தர் என்னோடு இடைப்பட்டார். அப்போது என் பாவங்களை முற்றிலும் அறிக்கையிட்டேன். அன்றைய தினமே என் வாழ்வு மாறியது. தீய எண்ணங்கள் என்னை விட்டு அகன்றுபோனதை உணர்ந்தேன். நான் ப்ரீடமுக்கு வரவில்லையென்றால் என் வாழ்க்கை சீர்கெட்டுப் போயிருக்கும். தேவன் எனக்கு மற்றோரு மகத்தான அற்புதமும் செய்தார். நான் கல்லூரி படிப்பை முடித்தவுடன் வேலை செய்து கொண்டே B.Ed., படிப்பதற்கு என் உறவினர்கள் ஏற்பாடு செய்தனர். ஆனால் எனக்கோ கல்லூரியில் சேர்ந்து B.Ed., படிக்க வேண்டும் என்று ஆசை. ஆகவே, ப்ரீடம் கூட்டத்தில் B.Ed., கலந்தாய்வில் இடம் கிடைக்க வேண்டும் என்று ஜெபக்குறிப்பு எழுதிக் கொடுத்தேன். கட் ஆப் மார்க் வெளிவந்தவுடன் எனக்கு கலக்கமாக இருந்தது. காரணம் என் தோழிகள் இருவருக்கு கலந்தாய்விற்காக அழைப்புக் கொடுக்கப்பட்டிருந்தது. ஆனால் எனக்கோ எந்த போன் அழைப்போ, கடிதமோ வரவில்லை. அன்றைய தினம் நான் என்ன செய்வது என்று குழம்பிக்கொண்டிருந்த நிலையில் என் தொலைபேசியில் ஒரு கால் வந்தது. அதில் கலந்தாய்விற்கு வரும்படி அழைப்பு விடுத்தனர். நான் நம்பிக்கையோடு புறப்பட்டுச் சென்றேன். நான் கலந்தாய்வு அறைக்குள் நுழையும்போது எங்களுக்கு அருகாமையில் உள்ள ஓரத்தநாடு கல்லூரியில் ஒரே ஒரு இடம் மட்டுமே இருப்பதை அறிந்தேன். அது எனக்கு கிடைக்கவேண்டும் என்றும் விரும்பினேன். நான் ஆச்சரியப்படத்தக்கவிதமாய் நான் விரும்பின கல்லூரியிலேயே இடம் கிடைக்க தேவன் கிருபைச் செய்தார். நான் மிகுந்த மகிழ்ச்சியடைந்தேன். எனக்காக ஜெபித்த உங்களுக்கு நன்றிகளைத் தெரிவிக்கிறேன்.

- ஷாமினி, திருவாரூர்

இலட்சக்கணக்கான வாலிபர்களை இரட்சிப்புக்கு நேராகவும் மற்றும் இறைவனின் ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்ளவும் ஏதுவாய் வழிநடத்தும் Freedom துதி ஆராதனை மும்பையிலும், கனடாவிலும் நடைபெறவிருக்கிறது. இக்கூட்டங்கள் சிறப்பாக நடைபெற உங்களின் ஜெபம் எங்களுக்கு மிகவும் அவசியம். மேலும் மும்பை மற்றும் கனடாவை தொடர்ந்து பல பட்டணங்களிலும், தேசங்களிலும் நடைபெற இருக்கும் Freedom துதி ஆராதனைகளுக்காகவும், சகோ. ஆல்வின் தாமஸ் அவர்களை இறைவன் இயேசு வல்லமையாக எடுத்துப் பயன்படுத்தவும் ஜெபித்துக் கொள்ளுங்கள். மேலும், இக்கூட்டத்தின் செலவீனங்கள் சந்திக்கப்பட பிரார்த்தனை செய்வதுடன், உங்களால் இயன்ற நன்கொடைகளை அளிக்க முன்வாருங்கள். கர்த்தரின் மேலான ஆசீர்வாதத்தை நிறைவாய் பெற்று மகிழுங்கள்.




# FVP FREEDOM VISION PARTNER

## ப்ரீடம் தரிசன பங்காளர்

- ப்ரீடம் DVD வெளிவரும் போது முதல் பிரதி இலவசமாய் உங்களுக்கு அனுப்பப்படும்.
- ப்ரீடம் பெருவிழாக்களில் VIP Seat உங்கள் குடும்பத்திற்காக ரிசர்வ் செய்யப்படும்.
- குடும்பத்துடன் சகோ. ஆல்வின் தாமஸ் அவர்களை சந்தித்து ஜெபிக்கலாம்.
- ரூஹா சுவாச காற்று மாத பத்திரிகை (ரூ.200 வருடத்திற்கு) இலவசம்.
- ஒவ்வொரு மாதத்தின் தீர்க்கதரிசன செய்தி CD இலவசமாய் அனுப்பப்படும்.
- ப்ரீடம் தரிசன பங்காளர்க்கு விசேஷித்த சான்றிதழ் வழங்கப்படும்.

- A free copy of every new release of FREEDOM DVD.
- Free V.I.P. Family Pass for all our concerts.
- A special prayer with Ps. Alwin Thomas with Family.
- Free "Ruah Suvasa Katru" monthly magazine (worth Rs.200/-).
- Free monthly prophetical message CD.
- Exclusive certificate for every Freedom Vision Partner.

**Money Order**
Ruah Ministries, No. 74/155, Pepzen Court, Arcot Road, Kodambakkam, Chennai - 24.

**Cheque / DD in favour of**
Ruah Ministries, payable at Chennai
A/c No.007701019766 ICICI Bank, Nesapakkam Branch.

**International Contributions**
Alwin Thomas, A/c No.602301500930, ICICI Bank, West Mambalam, Chennai

**Type FVP and SMS with your Name to 98849 01777**

**My Pledge / என் பங்கு**

My Special offering for **FREEDOM MUMBAI**
மும்பை ப்ரீடம்க்கு எனது பங்கு

- Rs.1,000/- ☐
- above Rs.1,000/- ____________

My Special offering for **FREEDOM CANADA**
கனடா ப்ரீடம்க்கு எனது பங்கு

- Rs.1,000/- ☐
- above Rs.1,000/- ____________

Name / பெயர் : Mr/Mrs/Miss ..............................................

Mobile / கைபேசி : ..............................................

Address / முகவரி : ..............................................

..............................................

Communication / தொடர்புக்கு : English ☐ தமிழ் ☐

Email ID / மின் அஞ்சல் : ..............................................

Date of Birth / பிறந்த நாள் : ..............................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# என்னை ஆசீர்வதித்த தேவன்

## ரூஹா தேவாலயத்திற்கு வருகை தந்து தன் வாழ்வில் அற்புத மாற்றத்தை கண்ட ஒருவரின் சாட்சி



என்னுடைய பெயர் எஸ். கோயில் துரை ஜெபக்குமார், சொந்த ஊர் நெல்லை மாவட்டம். நான் பெரிய அளவில் தொழில் செய்து வந்தேன், எனது வருமானம் பல கோடிகளில் இருந்தது. எனினும் கர்த்தரை அறியாமல் வாழ்ந்து வந்தேன். திடீரென்று என் தொழிலில் ஏற்பட்ட சரிவின் நிமித்தம் எல்லாவற்றையும் இழந்தேன். நண்பர்கள் மற்றும் சொந்த பந்தங்களிடம் உதவிக்காக சென்ற போது யாரிடமிருந்தும் எனக்கு எந்த உதவியும் கிடைக்கவில்லை. மிகவும் பரிதவிக்கப்பட்ட நிலமைக்கு தள்ளப் பட்டேன். என் வாழ்க்கையில் நான் அடைந்த வேதனைகளுக்கு அளவே இல்லை. நான் குடும்பத்தோடு தற்கொலை செய்து கொள்ளலாம் என்று முடிவெடுத்த வேளையில் தேவன் என்னோடு சொப்பனத்தில் இடைப்பட்டு போதகர் ஆல்வின் தாமஸ் அவர்களின் ஊழியத்தை குறித்ததான வெளிப்பாட்டைக் கொடுத்தார். அப்பொழுது போதகர் அவர்கள் நடத்தும் சபையை தேடி கண்டு பிடித்து குடும்பமாய் சபை ஆராதனைகளில் பங்குபெற ஆரம்பித்தேன். அன்றைய நாளிலிருந்து கர்த்தர் என்னையும் என் குடும்பத்தையும் ஆசீர்வதித்தார். சமாதானமும் குடும்பத்தில் பெருகியது.

இந்நிலையில் போதகர் அவர்கள் நடத்தும் வியாபாரிகளுக்கான சிறப்பு கூடுகையில் பங்கு பெற்றேன். கூடுகையில் பங்கு பெற்ற ஒவ்வொருவரும் தங்கள் தொழிலுக்காக ஜெபிக்கும்படி குறிப்புகளை எழுதி போதகரிடம் கொடுத்தார்கள். ஆனால் நானோ பல வித சிறுதொழில்களை செய்து வந்தாலும் எனக்கென்று எந்த தொழிலும் இல்லாமல் இருந்ததால் மிகவும் பாரத்தோடு காணப்பட்டேன். உடனே போதகரிடம் சென்று என் நிலைமையை எடுத்துச் சொல்லி எனக்காக ஜெபிக்கும்படி கூறினேன். போதகர் அவர்கள் எனக்காக மிகவும் பாரத்தோடு ஜெபித்து பிரியாணி கடை ஒன்றை ஆரம்பித்து நடத்துமாறு தேவன் வெளிப்படுத்தியதை கூறினார்கள். தேவன் அளித்த திட்டத்தின்படியே பெஸ்ட் பிரியாணி என்ற பெயரில் தொழிலை ஆரம்பிக்க கர்த்தர் கிருபை செய்தார். மூன்றே மாதங்களில் தேவன் என் தொழிலை ஆசீர்வதித்தார். என்னுடைய வருமானம் ஒவ்வொரு மாதமும் உயர்ந்துக் கொண்டே வருகிறது. அது மட்டுமல்ல என் குடும்பத்தையும் தேவன் ஆசீர்வதித்திருக்கிறார். என்னுடைய மகள் ஜெனிபாவை கடந்த மாதத்தில் ஃப்ரீடம் தரிசன பங்காளர் திட்டத்தில் சேர்த்தேன். எப்போதுமே சுமாராக படித்து பத்தாவது ரேங்கிற்கு மேல் எடுக்கும் என் மகள் இந்த மாதம் முதல் ரேங்க் எடுக்கும்படி கர்த்தர் அற்புதம் செய்தார். இது எங்களுக்கு மிகுந்த ஆச்சரியமாக இருந்தது. இப்பொழுது நாங்கள் குடும்பமாய் மிகவும் சந்தோஷமாய் இருக்கிறோம். துதி கனம் மகிமையை கர்த்தர் ஒருவருக்கே செலுத்து கிறேன்.

இந்த சகோதரரைப் போலவே ரூஹா சபையின் மூலமாய் ஆசீர்வாதங்கள் பெற்றவர்கள் எண்ணற்றோர். நீங்களும் ஏன் இப்படி ஒரு ஆசீர்வாதத்தின் பாத்திரமாய் மாறக்கூடாது. அன்பானவர்களே நீங்கள் ஞாயிற்றுகிழமைகளில் கீழே கொடுக்கப்பட்டுள்ள ஆராதனை நேரத்தில் உங்கள் வசதிக்கு ஏற்ப எதேனும் ஒரு ஆராதனையில் கலந்து கொண்டு ஆண்டவரின் அளவற்ற ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்ள உங்களை அன்புடன் அழைக்கிறோம்.

**எங்கள் முகவரி**


**ரூஹா எழுப்புதல் தேவாலயம்**
155, 3வது தளம், பெப்சன் கோர்ட், '
ஆற்காடு சாலை. (ராம் தியேட்டர் அருகில்)
கோடம்பாக்கம், சென்னை - 24.

**ஞாயிறு ஆராதனை நேரம்**

| | |
|---|---|
| காலை **6.00**<br>1ம் ஆராதனை (தமிழ்) | காலை **8.00**<br>2ம் ஆராதனை (ஆங்கிலம்) |
| காலை **10.00**<br>3ம் ஆராதனை (தமிழ்) | மதியம் **12.30**<br>4ம் வாலிபர் ஆராதனை |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# Benny's Cross Word Puzzle No. 2

**இடமிருந்து வலம் :**

1. இஸ்ரவேலர் அடிமைப்பட்டிருந்த தேசம்
4. ரூத்தின் மாமி பெயர்
6. எஸ்தருக்கு முன்பு இருந்த ராஜாத்தி
7. மோசேயின் கையில் இருந்தது
8. தேவனால் படைக்கப்பட்ட முதல் மனுஷன்
9. இயேசு ஞானஸ்நானம் பெற்ற நதி
15. ஆதாமின் மூன்றாம் குமாரன்
16. புதிய ஏற்பாட்டின் முதல் புஸ்தகம்

**மேலிருந்து கீழே :**


2. .................... எனக்கு ஜீவன்
5. மோசேயின் சகோதரி யார்?
3. யோசேப்பின் தாயார்
10. கோலியாத்தை கொன்றவர்
11. இஸ்ரவேலரை வழிநடத்தியவர்
12. சிங்கெபியில் போடப்பட்டவர்
13. ..............., மேஷாக், ஆபேத்நேகோ
14. காட்டத்தி மரத்தில் ஏறி இயேசுவை பார்த்தவன்

My Dear Friends! இந்த Puzzleக்கான சரியான விடையை இந்த கட்டத்தில் எழுதி, வெட்டி கீழ்காணும் முகவரிக்கு எனக்கு அனுப்பினால் உங்களுக்கு Gifts அனுப்பி வைக்கிறேன். Your's Benny.

விதிமுறை : போட்டியில் கலந்து கொள்பவர்கள் 12 வயதுக்கு உட்பட்டவர்களாக இருக்க வேண்டும்.

Dear Friends! போன மாசம் நான் கொடுத்த Questionsகெல்லாம் பதில் எழுதினதுக்கு ரொம்ப Thanks. இதுவரைக்கும் ஸ்கூல் புக்கை கவனமா படிச்சு Examல Pass பண்ணியிருப்பீங்க. அதே மாதிரி நீங்கள் Bible ஐயும் படிக்க பழகிக்குங்க. ஏன்னா இனிமேல் அந்த Bible கூட கிடைக்காத காலம் வரப்போகுது. அதனால தினமும் Bible ல படிக்கிறீங்களா! Bye!

# 7 வேத வினா போட்டி




1. கிதியோனின் மற்றொரு பெயர் என்ன?
2. யெகோவா ஷாலோம் என்ற பலிபீடத்தை கட்டியது யார்?
3. நெற்றியில் ஆணி அடித்து யாரை யார் கொன்றது?
4. தெபோராளின் புருஷன் பெயர் என்ன?
5. நீர்ப்பாய்ச்சலான நிலங்களையும் எனக்கு தர வேண்டும் என்று தன் தகப்பனிடம் கேட்டது யார்?
6. ஏன் அவனவன் தன்தன் பார்வைக்கு சரிபோனபடி செய்து வந்தான்?
7. தன்னைப் பார்க்கிலும் பலத்தவர்கள் என்று கண்டு, தன் வீட்டுக்கு திரும்பியவன் யார்?
8. சிம்சோன் தன் இருதயத்தை எத்தனையாவது தடவையில் தெலீலாளுக்கு வெளிப்படுத்தினான்?
9. இஸ்ரவேலின் நியாதிபதியாய் எழுப்பப்பட்ட முதல் மனிதன் யார்?
10. சீகேம் பட்டணத்தில் உப்பு விதைத்தது யார்?

மேலே குறிப்பிட்டுள்ள கேள்விகளுக்கு விடையை ஒரு வரியில் கீழ் காணும் முகவரிக்கு 20-10-2011க்குள் அனுப்பவும். சரியான விடையை எழுதுபவர்களில் மூன்று பேர் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படுவர். அவர்களுக்கு பரிசுகள் அனுப்பி வைக்கப்படும்.

RUAH SUVASA KATRU, 155, Pepzen Court, Arcot Road, Kodambakkam, Chennai - 24. Tamilnadu, South India. Email : magazine@ruah.in

வேத வினா போட்டி எண் 6க்கான விடை : (1) 12 கற்கள், யோசு 4:5 (2) கில்கால், யோசு 5:9 (3) யூதா கோத்திரம், யோசு 7:18 (4) கிபியோனியர், யோசு 9:3,4 (5) காலேபின் குமாரத்தி அக்சாள், யோசு 15:17-19 (6) 110 வருடங்கள், யோசு 24:31 (7) கீரியாத் அர்பா, யோசு 14:15 (8) 45 வருடங்கள் கழித்து, யோசு 14:10 (9) 30,000 பேர், யோசு 8:3 (10) ராகாப், யோசு 2:1

வேத வினா போட்டி எண் 6ல் வெற்றி பெற்றவர்கள் : 1) S. Franklin, Thoothukudi. 2) A. Chandrakala Srirangam. 3) M. Joy Vasantha, Ariyamangalam

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கிறிஸ்துவை அறியாத ஒரு குடும்பத்திற்கு இலவசமாக பத்திரிகையை அனுப்ப உதவுங்கள்



கிறிஸ்துவுக்குள் அன்புடையீர்!

நமது ரூஹா சுவாசக்காற்று பத்திரிக்கை மாதந் தோறும் பல ஆயிரக்கணக்கான வாசகர்களுக்கு இலவசமாய் அவர்கள் வீடு தேடிச் சென்று அவர்களுடைய கண்ணீர்களை துடைத்துக் கொண்டு வருகிறது. விசேஷமாக, கிறிஸ்துவை அறியாத அநேகர் இப்பத்திரிகையை வாசித்து, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரட்சிப்பையும், விடுதலையையும், அளவில்லாத ஆசீர்வாதங்களையும் நிரம்பப் பெற்று வருகிறார்கள்.

இப்பத்திரிக்கை பல வர்ணங்களில் வருவதற்கு ஒரு முக்கிய காரணம் **FREEDOM** எழுப்புதல் ஊழியங் கள் மூலமாக அநேக சிறுபிள்ளைகளும் வாலிபர்களும் இரட்சிக் கப்பட்டு வருகின்றனர். அவர்களுடைய எண்ணங்களைக் கவரும் விதத்தில் இப்பத்திரிக்கை உயர்தரமான ஆர்ட் பேப்பரை வாங்கி, அதை சிறந்த அச்சிட்டாளர்கள் மூலமாக அச்சிட்டு பிரசுரித்து வருகி றோம். இப்பத்திரிக்கையானது 2009 வது ஆண்டு அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்டு, முறைப்படி மத்திய அரசின் அனுமதியை **(RNI)** பெற்றப் பிறகே இப்பத்திரிக்கையை பல ஆயிரங்களுக்கு இன்று பாரத் தோடு, ஜெபித்து, ஆசீர்வதித்து அனுப்பி வைக்கி றோம். தற்போது ஏறக்குறைய ஆறாயிரம் பிரதிகளுக்கும் மேலாக இலவச மாகவே அனுப்பி வருகிறோம். இதன் மூலம் தேவனின் ஆசீர்வாதங்களை ஆயிரக்கணக்கான ஜனங்கள் பெற்று வருகின் றனர்.

இப்பத்திரிக்கை ஊழியத்திற்கு காணிக்கை அனுப்பினால் தான் இதை அனுப்புவோம் என்று கட்டாயப்படுத்தி புதிதாய் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை ஏற்றுக் கொண்டவர் களிடத்தில் கேட்க எனக்கு மனதில்லை. ஆகவே, இப்பத்திரிக் கைக்காக வருட சந்தா அனுப்பி தாங்க முடியும் என்ற வசதி யுள்ளவர்கள் தவறாமல் உங்களுடைய சந்தாவை அனுப் புவது மட்டுமல்லாமல் உங்கள் நண்பர்கள் உறவினர்கள் அல் லது முகம் தெரியாத இடத்தில் வசிக்கும் தேவை நிறைந் தோர்க்கு சந்தா அனுப்பி இந்த ஊழியத்தை நீங்கள் தாங் கும்போது உங்கள் மூலம் பலரது வாழ்வில் ஆசீர்வாதங்கள் சென்றடைவது மட்டுமின்றி நீங்களும் நூறத்தனையான ஆசீர்வாதங்களை பெற்றுக் கொள்வது நிச்சயம்.

இப்பத்திரிக்கையை பெற்றுக்கொள்ளும் நீங்கள் ஐந்து அல்லது பத்து பேர்களிடத்தில் பேசி அவர்களுடைய சந்தாக் களையும் அவர்களுடைய விலாசங்களையும் எங்களுக்கு அனுப்புவீர்களானால் உங்களின் உதாரத்துவமான காணிக்கை யினால் கிறிஸ்துவை அறியாத பல குடும்பங்களுக்கு நீங்கள் தேவனின் ஆசீர்வாதத்தை பெற்றுத் தர முடியும்.

வியாபாரம் செய்யும் நண்பர்களே! உங்களுடைய வியா பாரத்தின் விளம்பரங்களை நம்முடைய பத்திரிக்கையில் ஒரு தொகையை செலுத்தி உங்கள் விளம்பரங்களை நீங்கள் வெளி யிட்டு இவ்வூழி யத்தைத் தாங்க முன்வருவீர்களா?

தரமான ஒரு பத்திரிக்கையை வெளியிடுவதற்கு எங்கள் அலுவலகத்தில் ஆறுபேர் கொண்ட குழுவினர் முழு நேரமாக பணிபுரிந்து வருகின்றனர். மாதந்தோறும் இப்பத்திரிக்கையை வெளியிட பல இலட் சங்கள் தேவைப்படுகிறது.

இப்பத்திரிக்கையானது மிகு ந்த பாரத்துடனும், கண்ணீருடனும் ஜெபத்தோடு பலநாட்கள் மிகுந்த பிரயாசத்திற்கு பின்பே வெளிவருகிறது. ஆகவே தான் இதன் மூலம் ஆயிரக்கணக்கான மக்கள் ஆசீர்வாதத்தை பெற்று வருகின்றனர். ஒவ் வொரு நாளும் எண்ணற்ற சாட்சிகளை தேவன் எழுப்பி வருகிறார். சென்னையில் வசிக்கும் சிரோன்மணி என்னும் சகோதரி மிகுந்த ஏழைக் குடும்பத்தை சேர்ந்தவர். அவருடைய தகப்பனார் ஆட்டோ ஓட்டி அதினால் வரும் வரு மானத்தை வைத்து குடும்பத்தை நடத்தி வருகின்றனர். இவர் கள் ஒரு ஓலை குடிசையில் வசித்து வந்தனர். தற்செயலாக ரூஹா சுவாசக் காற்று பத்திரிக்கையை கிடைக்கப்பெற்ற இவர்கள் விசுவாசத்தோடு அதை வாசித்து, இரட்சிப்பையும் ஆசீர்வாதத்தையும் சமாதானத்தையும் பெற்றுக் கொண்டனர். பத்திரிக்கையின் மூலம் நன்மையை பெற்றுக் கொண்ட இவர்கள் தங்களின் மிகுந்த வறுமையிலும் கர்த்தருக்கு காணிக்கையாக தங்கள் சந்தா தொகையை பத்திரிக்கைக்காக அனுப்பி வைத்திருக்கின்றனர். பல குடும்பங்கள் ஆசீர்வதிக்கப் படவேண்டும் என்ற பாரத்தோடு காணிக்கையை அனுப்பின இவர்களின் ஆத்தும பாரத்தை கண்ணுற்ற கர்த்தர் இவர்களை ஆசீர்வதிக்க தொடங்கியிருக்கிறார். ஓலை வீட்டிலிருந்த இவர் களுக்கு தேவன் இரண்டு ஓட்டு வீட்டை சொந்தமாக கொடுத் தது மட்டுமின்றி பல வருடங்களாக தடைபட்டிருந்த சகோதரி யின் திருமண காரியமும் கைகூடி வரும்படி கர்த்தர் கிருபை செய்திருக்கிறார். இதனால் இக்குடும்பம் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. இப்பத்திரிக்கை ஊழியத்தை நேசித்து, ஜெபிக்கிற நீங்களும் கர்த்தரால் ஆசீர்வதிக்கப் படபோவது நிச்சயம். தேவனுக்கென்று உங்கள் காணிக்கை களை இப்பத்திரிக்கை ஊழியத்தில் விதைத்து மாபெரும் அறுவடையைப் பெற்று மகிழுங்கள். கர்த்தரின் ஆசீர்வாதம் உங்களோடிருப்பதாக!

ரூஹா சுவாசக்காற்று பத்திரிக்கையை பெற்றுக்கொள்ள கீழ்காணும் எண்ணுடன் தொடர்பு கொள்ளுங்கள்

**+91 988 4901 777**

உங்கள் சந்தா தொகையை அனுப்பும் போது 'பத்திரிக்கைக்கான சந்தா' என்று குறிப்பிட்டு எழுதி கீழ்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்

**Money Order**

**Ruah Ministries, No. 74/155, Pepzen Court, Arcot Road, Kodambakkam, Chennai - 24.**

**Cheque / DD in favour of**


**Ruah Ministries, payable at Chennai**

**A/c No.00701019766 ICICI Bank, Nesapakkam Branch.**

Owned and Published by E.Alwin Thomas No.5, 18th Avenue, Ashok Nagar, Chennai - 600 083. Printed by : T. Simon Peter Vasanth Prints & Packs No.44, Parthasarathi Pettai Street, Vellala Teynampet, Chennai - 600 086. Editor : E. Alwin Thomas

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Regd. Newspaper RNI : No. TNTAM/2010/36309
Postal Regd. No. TN/CC(S)Dn/411/11-13




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org